ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

22.04.2009 - மலர் 06, இதழ் 07




## உயிரின பன்மைத்துவத்தை காக்கும் அமைப்பு

## விண்வெளியில் வீரர்களிடையே மோதல்!

## இலவசமாக பணம் கொடுப்பவர்

## உயிரினங்கள் நகர்வதில் காணப்படும் மாற்றங்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Rs.25.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டை' எனப்படும் கழுத்துப்பட்டி





முக்கிய வைபவங்களில் உயர்ந்த கௌரவத்தை வெளிப்படுத்துவதற்காக 'டை' கட்டும் வழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. அநேகமான உத்தியோகத்தர்கள், மாணவர்களின் சீருடைகளில் ஒரு முக்கிய அங்கமாகவும் 'டை' காணப்படுகின்றது.



இந்த 'டை' பற்றிய வரலாற்றை நோக்குகையில் அது பலநூறு ஆண்டுகள் பின்னோக்கிச் செல்கிறது. 'டை'யின் ஆரம்பகாலம் பற்றிப் பார்க்கையில் புராதன எகிப்திலேயே 'டை' அணியப்பட்டதாக தெரிகிறது. உடை அணியும்போது ஒரு துண்டுத் துணியை கழுத்தில் கட்டித் தொங்கவிடும் வழக்கமானது எகிப்தியர்களின் உடை அணியும் பாரம்பரியத்தில் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது.

சீனாவில் சக்கரவர்த்தி ஷி ஹுவான்ங் டியின் புதைகுழியைச் சுற்றிலும் உள்ள சிலைகள் கழுத்துப்பட்டி கட்டப்பட்டு காட்சியளித்தன. ஐரோப்பிய நாகரிகத்தில் ஆண்களும், பெண்களும் உடையணியும் போது கழுத்தைச் சுற்றி துணித்துண்டு ஒன்றைக் கட்டிக்கொள்வதை நவீன நாகரிகமாகக் கருதினர். 1715 ஆம் ஆண்டில் ஸ்டொக்ஸ் (Stocks) எனப்படும் கழுத்து அணி ஒன்று உருவானது. 'ஸ்டொக்ஸ்' எனப்படும் இந்தக் கழுத்துப்பட்டி பருத்தி துணித் துண்டு ஒன்றை மடித்து சேர்ட் கொலரைச் சுற்றிக் கட்டப்பட்டது. இது ஆண்களுக்கு ஒரு கம்பீரமான தோற்றத்தை அளிப்பதாகக் கருதப்பட்டது. இக்காலப் பகுதியில் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்த ஆங்கில இளைஞர்கள் உடை அணிதலில் நவீன பாணிகளை அறிமுகப்படுத்தினர்.

1860 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைத்தொழில் புரட்சியானது கழுத்துப்பட்டி இலகுவானதாகவும் வசதியுள்ளதாகவும் இருக்கவேண்டிய அவசியத்தை உருவாக்கியது. அதன்மூலம் மக்கள் இன்றுவரை அணிந்துவரும் நவீன கழுத்துப்பட்டி (டை) உருவானது. இந்த கழுத்துப்பட்டி நீண்டதாகவும் மெல்லியதாகவும் இலகுவாக முடிச்சுப்போடக் கூடியதாகவும் அமைந்தது.

'டை' கட்டுவது வழக்கத்துக்கு வந்து விட்டபோதிலும் இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு முன்னர் தற்போது போல 'டை' பரவலாக அணியப்படவில்லை. 1944 ஆம் ஆண்டுக்குப் பின்னரே 'டை' கட்டும் வழக்கம் பரவலாகத் தொடங்கியுள்ளது.

-ராஜா

## கைப்பணிக் காரில் பயணம்



சுயமுயற்சியால் தானாகவே திறந்த கார் ஒன்றைத் தயாரித்து அதில் பயணம் செய்கிறார் நபர் ஒருவர். ஷெல்டன் கொலிஸ் என்னும் இந்த 34 வயதுடைய நபர் ஒரு இயந்திர தொழில்நுட்ப வல்லுனர் ஆவார். கயானாவின் தலைநகர் ஜோர்ஜ்டவுனில் வாழும் இவர் தனக்காக தயாரித்திருக்கும் இந்தக் கார் தோற்றத்தில் சாதாரண காரைப் போல் இல்லாவிட்டாலும் இதில் பல வசதிகளும் உள்ளன. கடந்த மூன்று வாரத்துக்கும் மேலாக இவர் இந்தக் காரில் பயணம் செய்து வருகிறார். இந்தக் காரில் சாதாரண கார்களில் உள்ளதைப் போன்று விளக்குகள், ஸ்டியரிங் வீல், கியர் மாற்றும் விசைகள், பெடல், பிரேக் மற்றும் இசைக்கருவி போன்ற பல வசதிகளும் உண்டு. பயிற்சி பெற்ற இயந்திர தொழில்நுட்ப வல்லுனரான இவர் பழைய 24 மோட்டார் சைக்கிள்களையும் 12 மோட்டார் கார்களையும் சொந்தமாக வைத்திருந்ததாகக் கூறுகிறார். சுயமாகத் தயாரித்த தனது காரில் அவர் பயணம் செய்வதையே மேலுள்ள படத்தில் காண்கிறீர்கள்.

## அருகிவரும் பறவை இனத்தால் மான்கள் அழிவு

சீனாவின் வடபகுதியிலுள்ள இயற்கைவள பாதுகாப்பு மையமொன்றில் பாதுகாக்கப்பட்டு வரும் பெருந்தொகையான மான்களை அருகிவரும் கொன்டோர் (Condor) இனக் கழுகுகள் வேட்டையாடி வருவதாக இயற்கைவள பாதுகாப்பு நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


இதுவரை நூற்றுக்கும் அதிகமான புள்ளிமான்களை இந்தக் கழுகுகள் கொன்று தின்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பீஜிங் நகரின் அருகில் உள்ள ஹெபெய் (Hebei) மாகாணத்தில் 'லுவான்ஹே ரிவர் நெஷனல் நேச்சர் ரிசர்வ்' (Luanhe River National Nature Reserve) என்னும் இந்த இயற்கைவள பாதுகாப்பு மையம் அமைந்துள்ளது.

சீனாவின் இயற்கைவள பாதுகாப்பு நிபுணர்கள் இந்த இரண்டு வகை அருகிவரும் இனங்களையும் பாதுகாப்பதில் பெரும் போராட்டம் நடத்தி வருகின்றனர். அருகி வரும் இந்தக் கழுகு இனம் வேறு பல பெரிய மிருகங்களையும் வேட்டையாடி அழித்து வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

'லுவான்ஹே' ஆற்றுப்பகுதியில் 50,634 ஹெக்டெயரில் அமைந்துள்ள இந்தப் பாதுகாப்பு மையம் 600 இற்கும் மேற்பட்ட புள்ளிமான்களுக்கும் மற்றும் பீஜிங்கின் ஒதுக்குப்புறப் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட 10 'கடம்பை' மான்களுக்கும் புகலிடமாக இருக்கிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இந்த இரண்டு இன மான்களும் அருகிவரும் இனங்களாக கணிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, 'கொன்டோர்' என்னும் இந்தக் கழுகு இனமும் பாதுகாக்கப்படும் இனமாக இருக்கின்றது.

நன்கு வளர்ந்த 'கொன்டோர்' இனக் கழுகு ஒன்று இறக்கையை விரித்தால் அது இரண்டு மீட்டருக்கும் அதிகமான பெரிய தோற்றம் கொண்டதாக இருக்கும். இதனைப் பாதுகாப்பு மையக் காவலர்களாலும் அச்சுறுத்த முடியாதாம். எனினும், இந்தக் கழுகுகளிடமிருந்து விலங்குகளைப் பாதுகாப்பதற்காக ரோந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றதாம்.

-சீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'க்ளோனிங்' முறையிலான முதல் ஒட்டகம்



க்ளோனிங் முறையில் உருவான உலகின் முதலாவது ஒட்டகம் ஐக்கிய அரபு ராச்சியத்தின் டுபாய் நகரில் பிறந்துள்ளது. இந்த பெண் ஒட்டகக் கன்றுக்கு 'இன்ஜாஸ்' எனப் பெயர் சூட்டியுள்ளனர். 'இன்ஜாஸ்' என்றால் 'சாதனை' என்று அர்த்தம். இந்தக் கன்று இம்மாதம் 8 ஆம் திகதி டுபாயிலுள்ள ஒட்டகம் மீள்உருவாக்க மத்தியநிலையத்தில் (Camel Reproduction Centre-CRC) பிறந்துள்ளது.



"இன்ஜாஸின் பிறப்பினை மத்தியநிலையத்திலுள்ள நாம் அனைவரும் மிகவும் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தோம். காரணம், இது எமது கூட்டு முயற்சியாகும். அத்துடன் இந்த நிகழ்வு உலகின் கவனத்தை நம் பக்கம் திருப்பக்கூடும் என்பதோடு, அது எமக்கு பெரும் வெற்றியாக அமையும் என்பதையும் நாம் அறிந்திருந்தோம்" என ஒட்டகம் மீள்உருவாக்க மத்தியநிலையத்தின் விஞ்ஞானத்துறைப் பணிப்பாளர் லூலு ஸ்கிட்மோர் தெரிவித்தார்.

அத்துடன், இன்ஜாஸின் ஆரோக்கியமான பிறப்பு, எதிர்காலத்தில் பால் உற்பத்தி ஒட்டகங்களின் க்ளோனிங் உருவாக்கத்திற்கு வித்திட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கருவானது குறித்த கருத்தாங்கி ஒட்டகத்தின் கருப்பைக்குள் உட்செலுத்தப்படுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் பரிசோதனைக்கூடத்தில் உருவாக்கப்பட்டது. ஏலவே நிர்ணயிக்கப்பட்ட 12 மாத கருக்காலம் நிறைவடைந்து, 20 நாட்கள் கடந்த பின்னரே இது பிறந்துள்ளது. பிறக்கும்போது 30 கிலோகிராம் எடையைக் கொண்டிருந்த இன்ஜாஸ், மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் அதன் செயற்பாடுகள் ஏனைய ஒட்டகக் கன்றுகளைப் போன்று இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, உலகில் முதலாவது க்ளோனிங் விலங்கான 'டொலி' எனும் செம்மறியாடு, 1996 ஆம் ஆண்டு எடின்பேர்க்கில் பிறந்ததோடு, 2003 ஆம் ஆண்டு அது உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

– ஜீநு

# க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றிய 753 மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 753 பேரின் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.



பார்த்து எழுதுதல், குறித்த பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் பரீட்சை எழுதுதல், குறிப்புகளை உடன் வைத்திருத்தல் போன்ற குற்றங்களைப் புரிந்தமைக்காக இந்த மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட மாணவர்களை தனித்தனியாக விசேட ஒழுக்கநெறி விசாரணைகளுக்கு உட்படுத்தவுள்ளதோடு, அந்த விசாரணைகளின் தீர்ப்புகளுக்கு ஏற்ப, அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் இந்த விசாரணைகளுக்குப் பின்னர் குற்றவாளியாக இனங்காணப்படும் மாணவருக்கு 5 வருடங்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு தடை விதிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விஞ்ஞானம், கணித பாட ஆசிரியர்கள் 50 பேர் பூட்டான் பாடசாலைகளுக்கு நியமனம்

விஞ்ஞானம் மற்றும் கணித பட்டதாரி ஆசிரியர்கள் 50 பேருக்கு இந்த வருடத்திலிருந்து பூட்டானிலுள்ள பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சார்க் நாடுகளின் உயர் கல்வி அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொண்ட பூட்டானின் உயர் கல்வி அமைச்சர் வியொன்ஃபெஜ் தாகூரின் வேண்டுகோளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஷ்வா வர்ணபால கூறியுள்ளார்.

பூட்டானின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாகவே விஞ்ஞானம் மற்றும் கணித பாட ஆசிரியர்கள் 50 பேரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து பூட்டான் பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, பேராதனை பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம் மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் ராகம வைத்திய பீடத்திலும் பூட்டான் மாணவர்கள் 20 பேருக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பற்ற இடங்களில் வகுப்புகளை நடாத்த வேண்டாமென ஆலோசனை

பாதுகாப்பற்ற இடங்களில் வகுப்புகளை நடாத்த வேண்டாமென கல்வி அமைச்சினூடாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அநேகமாக பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் வெளியிடங்களில் வகுப்புகளை நடாத்துவது வழக்கமான ஒரு செயலாக இருக்கின்றமையினால், இனிவரும் காலங்களில் பாதுகாப்பற்ற இடங்களில் மாணவர்களை ஒன்று சேர்த்து வகுப்புகளை நடாத்த வேண்டாமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடந்த முதலாம் திகதி சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.



வவுனியா மாவட்ட பாடசாலையொன்றின் ஆசிரியரொருவரும் மாணவியொருவரும் மரக்கிளையொன்று முறிந்து விழுந்தமையால் உயிரிழந்த சம்பவத்தை அடுத்தே கல்வி அமைச்சினால் மேற்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகம் முழுவதும் உயிரினங்களின் பன்மைத்துவத்தைப் பாதுகாக்கும் IUCN அமைப்பு

## IUCN என்றால் என்ன?

IUCN என்பது பல சொற்றொடர்களின் சுருக்கமாகும். உலகப் பாதுகாப்பு அமைப்பு (World Conservation Union) எனப்படும் இயற்கை மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பாகும்.(International Union for the Conservation of Nature and Nature resources) இதனைச் சுருக்கமாக IUCN என்று குறிப்பிடுவர்.

## ஆரம்பம்

இரண்டாம் உலகப்போர் பாரிய இயற்கை வள அழிவுகளை ஏற்படுத்தி விட்டு நிறைவுற்றது. அதனால், சூழலைப் பாதுகாப்பதன் அவசியம் பலருக்கும் புரிய ஆரம்பித்தது.அதன்படி,1948ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளின் விஞ்ஞானிகள் பலரின் பங்களிப்புடன் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. சூழல் பாதுகாப்பே இந்த அமைப்பின் பிரதான நோக்கமாக இருந்தது.

## சர்வதேச உயிரினப் பாதுகாப்பு அமைப்பின் நோக்கங்கள்

உலகில் உள்ள உயிரினங்களின் பன்மைத்துவத்தைப் பாதுகாக்கவும் இயற்கை வளப் பயன்பாட்டினை நீதியாகவும் திடமாகவும் மேற்கொள்ளவும் உலக மக்களுக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகள் அனுசரணைகள் வழங்குதல் என்பன இந்த அமைப்பின் நோக்கமாகும்.

## இதற்கான அவர்களது பணிகளாவன

* உயிர்களின் பன்மைத்துவம் மற்றும் பாதுகாப்புக் குறித்து அறிவூட்டல்.
* நிபுணர்களை மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளல்.
* சூழல் பாதுகாப்பு சம்பந்தமான சட்ட வரைவுகளைத் தயாரிக்க உதவுதல்.
* அழிவுறும் அபாயத்தினை எதிர்நோக்கும் உயிரினங்கள் மற்றும் சூழல் வலயங்கள் குறித்த தகவல்களை சேகரித்து சிவப்பு தகவல் புத்தகத்தினை (Red Data Book) வெளியிடல்.
* உயிர்களின் பன்மைத்துவ பாதுகாப்புக் குறித்த பலதரப்பட்ட ஆக்கங்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை பிரசுரித்து விநியோகித்தல்.

### IUCN பற்றிய தகவல்கள் சில...


* **ஆரம்பம் 1948 இல்**
* **தலைமையகம் சுவிற்சர்லாந்தில் அமைந்துள்ளது.**
* **ஆசிய வலய அலுவலகங்கள் சிங்கப்பூர், பெங்கொக் நகரில் உள்ளன.**
* **அங்கத்துவம் : உலகின் பல நாடுகள், அமைப்புகள், அரச சார்பற்ற பல அமைப்புகள்.**
* **IUCN தொழில்நுட்ப அறிவினையுடைய உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளைத் தன்னகம் கொண்டது.**
* **இலங்கையில் 1988 இல் ஆரம்பிக்கப்பட்டது.**
* **அரசுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை 1993 இல் கைச்சாத்திடப்பட்டது.**
* **அங்கத்துவம் பெற்ற இலங்கையைச் சேர்ந்த அரச சார்பற்ற அரச நிறுவனங்களின் எண்ணிக்கை 10**

**உ+ம் : வனப் பாதுகாப்புத் திணைக்களம், 'சேவா லங்கா' நிறுவனம் என்பன இவற்றில் சில.**

## உயிரினப் பன்மைத்துவ பாதுகாப்பிற்கான கல்வி

* உயிரினப் பன்மைத்துவம் குறித்து பாடசாலை பாடநெறிப் பரிந்துரைகளுக்கு ஏற்ப நூல்கள், சஞ்சிகைகளை வெளியிடல்.
* சூழல் அமைப்புகள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு அறிவினைப் பெற்றுக் கொடுக்கும் விரிவுரைத் திட்டங்களை நடத்துதல்.
* தேசிய கல்வி நிறுவனத்தின் ஊடாக ஆசிரியர்களுக்கு உயிரினப் பன்மைத்துவ பாதுகாப்புத் துறை பற்றிய பயிற்சிகளை வழங்குதல்.
* விலங்குகள் பாதுகாப்பு இளைஞர் அமைப்பு, இளம் ஆய்வாளர்கள் அமைப்பு போன்ற இளைஞர் அமைப்புகளுடன் செயற்பட்டு நாடு முழுவதும் உயிரினப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
* அந்த இளைஞர் குழுக்களுக்கு தமது கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் மற்றும் வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பம் வழங்கல்.
* அனைவராலும் பயன்படுத்தக் கூடியளவுக்கு நூலகம் ஒன்றினை இலங்கை அலுவலகத்தில் நடத்துதல்.
* பலதரப்பட்ட ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஊட்ட நடவடிக்கை எடுத்தல்.

உயிரினப் பன்மைத்துவம் மற்றும் அதன் பாதுகாப்புக் குறித்து மேலும் அறிந்து கொள்ளவேண்டுமாயின்,







**இலங்கை அலுவலகம்,**
**53, ஹோர்ட்டன் பிளேஸ்,**
**கொழும்பு-7.**
**தொலைபேசி : 2694094,**
**2682418**

எனும் முகவரியுடனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

இந்த அமைப்பின் அங்கத்துவத்தினை நீங்களும் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு நீங்கள் சூழல் மற்றும் உயிரினங்கள் பாதுகாப்புத் தொடர்பில் ஏதேனும் பணியாற்றியவராக இருக்க வேண்டும். இதற்காக உங்களிடம் சிற்சில தகுதிகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

## கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்

நீங்கள் இயற்கையை நேசிக்கின்றவராயின் உங்கள் வீட்டு வாசலில் பிடுங்கி வீசப்படும் ஒரு செடியினைப் பற்றிச் சிந்தியுங்கள். அந்த செடி குறிப்பிட்ட ஓர் இனத் தாவரத்தின் இறுதிச் செடியாகவும் இருக்கக்கூடும்.

## சிவப்பு தகவல் புத்தகம் (Red Data Book)

இந்த சிவப்பு தகவல் புத்தகத்தில் அழியக்கூடிய அபாயத்தில் இருக்கும் உயிரினம் மற்றும் தாவரம் பற்றிய தகவல்கள் உள்ளன. IUCN அமைப்பினால் 'சிவப்பு தகவல் புத்தகம்' வருடாந்தம் வெளியிடப்படுகின்றது. 1999 இல் இலங்கையில் இப்புத்தகம் வெளியிடப்பட்டது. இதில் இலங்கைக்குரிய விசேட உயிரினங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் பல்வேறு உயிரினங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன. இலங்கைக்குரித்தான சில விசேட உயிரினங்களும் தாவர இனங்கள் 90 சதவீதமானவையும் அழியக்கூடிய அபாயத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனில் ஏற்பட்டுள்ள மாற்றம்தான் காரணமாம்!

சமீப காலமாகவே உலகின் பல்வேறு நாடுகளிலும் பனிமழை பெய்து, உறைவது அதிகரித்த வண்ணம் இருப்பதை ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். இந்த திடீர் காலநிலை மாற்றத்தினால் நாடுகள் பலவற்றிலும் மக்களின் அன்றாட வாழ்வும் வாழ்வாதாரமும் பெரியளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக விஞ்ஞானிகள் பல்வேறு ஆய்வுகளை நடத்தி வருகின்றனர்.

வழமை போல் இதற்கான காரணங்கள்; சூழல் மாசடைதல், பச்சை வீட்டு வாயுக்களின் தாக்கம் என்பனதான் என விஞ்ஞானிகள் எவரும் கருதவில்லை. மாறாக, அவற்றுடன் வேறு சில விடயங்களும் ஏதுவாக அமையலாம் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும். அதன்படி, பூமியைச் சுற்றியுள்ள மேல் வளிமண்டலம் அதிக குளிர்ச்சியடைந்தும் உள் வளிமண்டலம் அதிக வெப்பம் அடைந்தும் காணப்படுவது இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்; அதற்கான ஆய்வுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

மேற்குறித்த காரணங்களைத் தவிர, சூரியனில் ஏற்பட்டுள்ள மாற்றமும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. அதாவது சமீப காலமாக சூரியனில் ஏற்பட்டுள்ள கரிய தழும்பொன்று விரிவடைந்து வருவது அவதானிக்கப்பட்டு வருகின்றது. இக்கரிய தழும்பு காரணமாக சூரியனிலிருந்து புவிக்குக் கிடைக்கும் வெப்பம் குறைவடைந்துள்ளது என்ற



கருத்தும் விஞ்ஞானிகளிடையே நிலவுகின்றது.

இந்நிலையில் இவ்வாறான காலநிலை தொடர்ந்து நீடிக்குமென்றும் அதனால், பல நாடுகளும் பல்வேறு நெருக்கடிகளுக்கு தள்ளப்படலாம் எனவும் எதிர்வு கூறப்படுகிறது.



## விண்ணியலுக்கு வயது 400

400 ஆண்டுகளுக்கு முன்னால், கி.பி 1609 ஆம் ஆண்டு உலகின் முதலாவது விண்ணியல் தொலைநோக்கி (Astronomy Telescope) கண்டுபிடிக்கப்பட்டது. இத்தாலிய விண்வெளி அறிஞர் கலிலியோ கலிலி கண்டுபிடித்த அந்த தொலைநோக்கிதான் மனித குலத்தின் விண்வெளிப் பயணத்துக்கு வழியமைத்தது. அதே 1609 ஆம் ஆண்டில்தான் ஜொஹன்னஸ் கெப்லர் எழுதிய 'Astronomia Nova' என்ற விண்ணியல் நூலும் வெளியிடப்பட்டது. விண்வெளியில் கோள்களின்




இயக்கங்கள் குறித்த அடிப்படை விதிகளை முதன்முதலில் விளக்கியதும் அந்நூல்தான்.

மேற்படி, இரு நிகழ்வுகளினதும் 400 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் நோக்கில் இந்த ஆண்டினை (2009 ஆம் ஆண்டு) சர்வதேச விண்ணியல் ஆண்டாக (International Year of Astronomy-IYA) சர்வதேச வானவியல் ஒன்றியம் (International Astronomical Union) பிரகடனப்படுத்தியுள்ளது. ஐ.நா சபையின் இணை நிறுவனமொன்றான UNESCO வும் இதை அங்கீகரித்திருக்கிறது. இதனையொட்டி கடந்த ஜனவரி 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் சர்வதேச விண்ணியல் ஆண்டின் ஆரம்பவிழா பிரான்ஸ் தலைநகர் பெரிஸில் அமைந்துள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அத்துடன், இந்த கொண்டாட்டத்தின் மற்றொரு அங்கமாக இந்த ஆண்டு முழுவதும் இடைக்கிடையே விண்வெளி குறித்த கண்காட்சிகளையும் விஞ்ஞானக் கருத்தரங்குகளையும் பல முக்கிய நகரங்களில் நடத்துவதற்கு 130 இற்கும் மேற்பட்ட நாடுகள் உத்தேசித்துள்ளன.

## விண்வெளி வீரர்களிடையே தகராறு

விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் தங்கி இருக்கும் ரஷ்ய விண்வெளி வீரர்தான் கென்னடி படல்கா (Gennady padalka). 50 வயதான அவர், தான் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள அமெரிக்க மலசல கூடத்தைப் பயன்படுத்த முற்பட்டபோது அமெரிக்க விண்வெளி வீரர்கள் அதற்கு தடை விதித்ததாகவும் அங்குள்ள





உடற்பயிற்சி சைக்கிளைப் பயன்படுத்த அனுமதி அளிக்கவில்லை எனவும் கூறியிருக்கிறார்.

அதேவேளை, அமெரிக்க விண்வெளி வீரர்கள் தாம் கொண்டுவந்துள்ள உணவுகளையே சாப்பிடுகின்றனர். அவ்வாறே நாங்களும் நாம் இங்கு கொண்டு வந்த உணவுகளை மாத்திரம் தான் சாப்பிடுகிறோம் என ரஷ்ய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; "அமெரிக்கா-ரஷ்ய விண்வெளி வீரர்கள் பல ஆண்டுகளாக ஒருங்கிணைந்தே பணியாற்றி வந்தனர். ஆனால், 2003 ஆம் ஆண்டு அமெரிக்க வீரர்களை விண்வெளிக்கு அனுப்பியபோது, அமெரிக்காவிடம் ரஷ்யா அதற்கான கட்டணத்தை வசூலித்தது. இதைத் தொடர்ந்தே அமெரிக்க-ரஷ்ய விண்வெளி வீரர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது" என்றும் தெரிவித்துள்ளார்.

## ஓர் ஆட்ட அரங்கம்

பிரபஞ்சம்:

விண்ணியல் அறிவுக்கு மகத்தான பங்களிப்பைச் செய்த ஒரு விஞ்ஞானிதான் ஜேர்மனியைச் சேர்ந்த ஜொஹன்னஸ் கெப்லர். இவர் கடவுள் நம்பிக்கை மிக்கவர். விண்ணியல் குறித்த நூல்களை எழுதியதோடு, கணிதத் துறையில் நுண்கணிதத்தை (Infinitesimals in Mathematics) ஆராயும் 'கல்கியுலஸ்' துறையை துவக்கியவருமாவர்.மேலும், சூரியனிலிருந்து எழும் காந்த விசையே ஏனைய கோள்கள் சூரியனைச் சுற்றி வரக் காரணமாக அமைகின்றது என்று அறிவித்தவரும் கெப்லர்தான்.

அதேபோன்று மற்றைய கோள்களிலும் ஈர்ப்பு விசை உள்ளதெனவும் அந்த ஈர்ப்பு விசையின் காரணமாகவே பிரபஞ்ச இயக்கம் சீரிய ஒழுங்கு முறையில் நடைபெறுகிறது எனவும் விளக்கி, பிரபஞ்சம் ஓர் ஆட்ட அரங்கம் (Dynamic Universe) என்ற கொள்கையை நிறுவினார். பிரபஞ்சத்தைக் கடவுள் ஒரு கணித அமைப்பாட்டில் ஆக்கியுள்ளார் என்று வர்ணித்த கெப்லர், பிரபஞ்சத்தை விளங்கிக்கொள்ள தனக்கு ஆழ்ந்த உள்ளொளி (Insight) அளித்த கடவுளுக்கு நன்றி கூறுவதாகவும் தெரிவித்திருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியில் உயிரினங்



கண்ணன்: எல்லா உயிரினங்களும் ஒரே விதமாக நடமாடுவதில்லை அல்லவா? சில நடக்கின்றன. சில பறக்கின்றன. சில நீந்துகின்றன. சில ஊர்ந்து செல்கின்றன. இச்செயற்பாடுகளுக்கு உயிரினங்களின் கால்கள், இறக்கைகள், மீன் சிறகுகள், சில உயிரினங்களில் சுரக்கும் திரவங்கள் போன்றவை உதவுகின்றன.

கமல்: ஆம்! அது உண்மைதான். உயிரினங்கள் நடமாட்டம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கின்றது. உலகில் உயிரினங்களின் நகர்வு முறைகள் வேறுபடுகின்றன. இந்த வித்தியாசமான நகர்வு முறைகளை இங்கு ஆராய்வோம்.

## உயிரின நகர்வு





நகர்வு என்றால் பயணம்செய்தல், கடந்து செல்லல் அல்லது அங்கும் இங்கும் நகர்தல் என்று அர்த்தமாகும். நகர்வு உலகில் உள்ள எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான தன்மையாகும். ஆயினும், நகர முடியாத சில உயிரினங்களும் உலகில் உள்ளன. அவை வேறு சில உயிரினங்கள் மீது தங்கி வாழ்கின்றன. கடலில் இருக்கும் கடற் பூக்கள் போன்ற 'சிலென்டரேட்டா'க்களும் 'மொலஸ்கா' எனப்படும். சில சிப்பிகளும் இவற்றில் அடங்கும். இவற்றின் வாழ்நாள் அசையாமலேயே கழிந்து விடுகின்றன.

பிரதானமாக நகர்வு என்பது இரண்டு வகைப்படும். சொந்த நகர்வு மற்றும் ஊடக நகர்வு முறைகளாகும். 'புரொடொசோவா' போன்ற ஒற்றைக்கள உயிரினங்கள் நகர்வின் மூலம் நகருபவையாகும். இவை தண்ணீர், காற்று போன்ற ஊடகமொன்றில் மிதந்து அவ்வூடகங்கள் நகரும்போது அதன் மூலம் அள்ளுண்டு செல்கின்றன. இதன்மூலம் முறையான நகர்வு இடம்பெறாது.

மனிதன் உட்பட பாலூட்டிகள், பறவைகள், மீன்கள், ஊர்வன, கிருமிகள் மற்றும் நீரிலும், தரையிலும் நடமாடும் உயிரினங்கள் சொந்த நகர்வைக் கொண்டவையாகும். இந்த உயிரினங்கள் தமது உடலில் தோன்றும் சக்தியில் ஒரு பகுதியை நகர்வுக்காக செலவிடுகின்றன.

## பாலூட்டி வகைகள்

மனிதராகிய நாம் பாலூட்டி உயிரினங்களை சேர்ந்தவர்களே. மனிதன் கால்கள் மூலமே தனது நகர்வை மேற்கொள்கின்றான். ஏனைய பாலூட்டிகள் மூன் கால்களையும் பாவிக்கின்றன. கால்களின் அமைப்பின்படி பாலூட்டிகள் மூன்று வகைப்படும். பாத நகர்வன, விரல் நகர்வன மற்றும் குளம்பு நகர்வன என்பனவாகும்.

## சூழலுக்கு ஏற்ற நகர்வுகள்

சொந்த நகர்வு உள்ள உயிரினங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை தரையிலும் தண்ணீரிலும் வளிமண்டலத்திலும் நகர்வதன் அடிப்படையில் இவ்வாறு பிரிக்கப்படுகின்றன.

சகல உயிரினங்களும் இந்த மூன்று வகைகளில் ஒன்றிலாவது அடங்கும். அவை வாழும் சூழலுக்கேற்ப இந்த நகர்வு முறைகள் அமைந்துள்ளன. தத்தமது சூழலுக்கேற்ப அவ்வுயிரினங்கள் தமது நகர்வு முறைகளை அமைத்துக் கொள்கின்றன. சில உயிரினங்கள் ஒரு சூழலில் மட்டுமன்றி இரண்டு வித சூழல்களில் வாழும் தன்மை கொண்டவையாகும். அவ்வாறான உயிரினங்கள் அவ்விரண்டு சூழல்களுக்கும் அமைய தமது நகர்வு முறைகளை அமைத்துக் கொள்கின்றன.

பறவைகள் காற்று நகர்வு முறையைக் கொண்டவையாகும். இவை காற்றை ஊடகமாகக் கொண்டு பறக்கின்றன. சில பறவைகளுக்கு நிலத்தில் நடக்கவும் குதிக்கவும் நீரில் நீந்தவும் முடியும். சில பறவைகள் இம்மூன்று ஊடகங்களிலும் நகரக் கூடியனவாகும்.

## தரை நகர்வுகள்

பல உயிரினங்கள் தரையில் நகர்ந்து செல்கின்றன. இதற்காக மனிதன் உட்பட பாலூட்டிகளே மிகவும் சிறப்பாகத் தம்மை அமைத்துக் கொண்டுள்ளன. இவற்றுக்கு புறம்பாக பறவைகள்,ஊர்வன, தரையிலும் நீரிலும் நகர்வன, கிருமிகள் மற்றும் பல்காலிகள் என்பன தரையில் நகர்கின்றன. அவை நடத்தல், ஓடல், பாய்தல் மற்றும் ஊர்ந்து செல்லல் போன்ற நகர்வு முறைகளைப் பின்பற்றுகின்றன.

தரை நகர்வுக்காக கால்களே (இருகால், நாற்கால், பல்கால்) உதவுகின்றன. கால்களை நகர்வுக்காகப் பயன்படுத்துவதற்கு அசைவு தசைநார்களும் எலும்புகளும் இருக்க வேண்டும். முறையான நகர்வுகள் அவற்றின் மூலமே சாத்தியமாகின்றன. கால்கள் இல்லாத தரை உயிரினங்கள் தமது உடலை உபயோகித்து நகர்கின்றன. பாம்புகள் மற்றும் புழுக்கள் போன்ற உயிரினங்கள் இதில் அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...களின் நகர்வுகள்



## நகர்வன



பாதத்தின் சகல எலும்புகளையும் (விரல், குதிக்கால்) கொண்டு நிலத்தைத் தொடுவதன் மூலம் நகரும் உயிரினங்கள் பாத நகர்வனவாகும். மனிதன், கொரில்லா, கரடி மற்றும் ஓராங்உட்டான் என்பன இவ்வகையை சேர்ந்த உயிரினங்களாகும்.

## விரல் மேல் நகர்வன



இவை பாதங்களின் விரல்களில் உள்ள எலும்புகளின் உதவியால் நகர்கின்றன. இவற்றின் நகங்களோ, குதிக்காலோ நிலத்தைத் தொடாது. உடலின் முழுப் பளுவும் பாதங்களின் எலும்புகள் மீதே தங்கியிருக்கின்றன. நாய், புலி, சிங்கம் ஆகியன இவ்வகையைச் சேர்ந்தவையாகும்.



## குளம்பு நகர்வன

பாத விரல்களின் நுனியில் உள்ள எலும்புகள் மூலம் நகர்வதையே இது குறிக்கின்றது. இதற்காக இந்த எலும்புகள் சிறப்பான முறையில் மாற்றமடைந்து காணப்படுகின்றன. அவற்றையே நாம் 'குளம்புகள்' என்றழைக்கின்றோம். இந்தக் குளம்புகள் வேகமாக ஓடக்கூடிய வகையில் பலமாக அமைந்துள்ளன. உடலின் முழுப் பளுவையும் இந்தக் குளம்புகளால் தாங்கி நிற்க முடிகிறது. குதிரை, மான், மாடு, மரை, ஆடு என்பன இவ்வகையில் அடங்குகின்றன.



## பறவைகள்



பறவைகள் காற்றில் நகரக்கூடிய வகையில் அமைந்துள்ள உயிரினங்களாகும். ஆனால், முற்றாகவே பறக்க முடியாத அல்லது நன்றாகப் பறக்க முடியாத பறவைகள் தரையில் நகரக்கூடிய வகையில் அமைந்துள்ளன. அவை தரையில் நடந்தோ அல்லது தாவித் தாவியோ நகர்கின்றன. இதற்காக இவை தமது பின்னங்கால்களை உபயோகிக்கின்றன. தரை நகர்வுக்குப் பொருத்தமான வகையில் அவற்றின் கால்கள் திடமானவையாக உள்ளன. கோழி, நெருப்புக் கோழி போன்றவை அவ்வாறு தரை நகர்வுக்குப் பொருத்தமான முறையில் தம்மை அமைத்துக் கொண்டவையாகும்.



## ஊர்வன



தரையில் நகரும் ஊர்வன இரண்டு வகைப்படும். பாம்புகளும் நான்கு கால் ஊர்வனவும் இவற்றில் அடங்கும். நாற்கால் ஊர்வனவற்றின் கால்கள் நடக்க, தாவிப் பாயக்கூடியதாக அமைந்துள்ளன. இவை ஓணான், அரணை, பல்லி போன்ற உயிரினங்கள் ஆகும்.

ஊர்வனவற்றில் பிரதானமானவை பாம்புகளாகும். இவை ஊர்ந்து செல்லல் மூலம் நகர்கின்றன. இந்த நகர்வுக்குப் பொருத்தமான வகையில் அவற்றின் முதுகெலும்பும் தசை நார்களும் அசையும். நகர்வதற்காக பாம்பு தமது முழு உடலையுமே உபயோகிக்கும். அவற்றின் உடலில் உள்ள கரகரப்பான தன்மை நகர்வுக்கு உதவும்.

## தரையிலும் தண்ணீரிலும் நகர்வன

இவை மூன்று வகைப்படும். முதலாவது, வகைக்கு நான்கு கால்கள் இருந்தபோதிலும் வாலில்லை. இவை நடந்தும் தாவித் தாவிப் பாய்ந்தும் நகர்கின்றன. இதற்காகவே அவற்றுக்கு கட்டையான கால்கள் இருக்கின்றன. தவளை இவ்வகையை சேர்ந்ததாகும். இரண்டாவது, வகைக்கு நான்கு கால்களும் வாலும் உள்ளன. மூன்றாவது, வகைக்கு கால்கள் இல்லை. இவை பாம்புகள் போன்று ஊர்ந்து செல்கின்றன. மேற்கூறியவற்றில் சில



தரையிலும் நீரிலும் நகரும் திறன் கொண்டவையாகும்.

## பாலூட்டிகளிடையே சிறப்பம்சம் கொண்ட உயிரினம்

பாலூட்டிகளில் குரங்குகள் காட்டு வாழ்க்கைக்கு ஏற்ப தம்மை அமைத்துக் கொண்டுள்ளன. குரங்கின் முன்பின் கால்கள் மரங்களின் கிளைகளை பற்றிப் பிடிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. அக்கால்கள் வளைந்து கொடுக்கக் கூடியனவாகவும் பலமானவையாகவும் உள்ளன.

'பிரைமேட்டா' இனத்தைச் சேர்ந்த 'புத்துலகக் குரங்குகள்' நகர்வதற்காக கால்களை



மட்டுமன்றி வாலையும் உபயோகிக்கின்றன. மரக்கிளைகள் மீது உடலை சமநிலையாக வைத்திருக்கக்கூடிய வகையில் அவற்றின் வால் அமைந்துள்ளது.

## நத்தை



நத்தையின் உடல் ஒரு பகுதி ஓடாகவும் மிகுதி தசையாகவும் அமைந்துள்ளன. அது தரையில் நகரும்போது கால்களை உபயோகிக்கும். கடுமையான தரையின் மீது நகரும்போது அது ஒருவகைத் திரவத்தை வெளிவிடும். அதன்மூலம் நத்தை வழுக்கிச் செல்கின்றது.

## பல்கால் உயிரினங்கள்

முதுகெலும்பு இல்லாத உயிரினங்களான இவற்றுக்கு பெரும் எண்ணிக்கையில் கால்கள் உண்டு. நட்டுவக்காலி, ஜலமண்டலி, பூரான் என்பன இவ்வகையை சேர்ந்தவையாகும். அவற்றின் உடல் பல பாகங்களாக ஒன்றிணைந்து அமைந்துள்ளது. எல்லாப் பாகங்களிலும் கால்கள் உள்ளன. இக்கால்கள் ஒரே தொகுதியாக இயங்குகின்றன.



## பூச்சிகள்



இவற்றுக்கு முதுகெலும்பு இல்லை. இவை பல வகையில் நகரும். பறக்க முடியாத எறும்பு போன்றவை கால்களை உபயோகித்து நகர்கின்றன. இதற்காக மூன்றாகப் பிரிந்துள்ள உடல் பாகங்கள் அமைந்துள்ளன. மூன்று சோடி கால்கள் உபயோகிக்கப்படுகின்றன. கொசு, ஈ போன்ற பூச்சிகளுக்கும் பறக்க முடியும். இவையும் தரையில் நடமாட மூன்று சோடி கால்களை உபயோகிக்கின்றன.



## சிலந்தி, தேள்



முதுகெலும்பு இல்லாத இவை நகர்வதற்காக நான்கு சோடி கால்களை உபயோகிக்கின்றன. உடல் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளன. தலையும் மேலுடலும் ஒன்றாகத் தென்படும். (பூச்சிகளின் தலையும் மேலுடலும் வேறுபட்டு இருக்கும்) தலையும் மேலுடலும் ஒன்றாக இருக்கும் பகுதியில் கால்கள் அமைந்திருக்கின்றன.



## புழுக்கள்

இவையும் முதுகெலும்பு இல்லாத உயிரினங்களாகும். ஒன்றோடொன்று இணைந்த பல பாகங்களைக் கொண்டு இதன் உடல் அமைந்துள்ளது. சகல பாகங்களையும் அசைக்க முடியும். இந்த பாகங்களை அசைப்பதன் மூலம் இவை நகர்கின்றன.





-அயூப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பழமையான ஹொக்கி

சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதுதான் இந்த ஹொக்கி விளையாட்டு. நைல் நதிப் பள்ளத்தாக்கில் பெனிஹசன் என்ற ஓர் இடம் இருக்கின்றது. இங்கே சரித்திரம் சொல்லும் தூண் ஒன்று உள்ளது. இத்தூணில் இரண்டு பேர் ஆளுக்கு ஒரு கோலை வைத்துக்கொண்டு, கீழே இருக்கும் உருண்டையான ஒரு பொருளை அடிக்க முயல்வது போன்ற ஒரு காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியம் கி.மு 2000 ஆம் ஆண்டில் வரையப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதேபோல், எதென்ஸ் நகரிலும் ஒரு சிலையின் அடியில் ஆறு மனிதர்கள் சிறு அளவிலான சிலைகளாகச் செதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் கையிலும் நுனி வளைந்த கோல் ஒன்று காணப்படுகிறது. கீழே ஒரு பந்தும் உள்ளது. கி.மு 490 ஆம் ஆண்டைச் சேர்ந்த இந்தச் சிற்பமும் ஹொக்கி விளையாட்டின் தொன்மையை விளக்குகிறது.

இது... உங்களுக்கு மட்டும்!

# வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகுமா?

சமூகத்துடனான உங்கள் தொடர்புகளுக்கும் உரையாடல்களில் உணர்வுபூர்வ வெளிப்பாட்டுக்கும் உதவுவது சிரிப்பு. அவ்வாறே, உங்களைச் சுற்றி நேர்மறை அதிர்வுகளை (Positive Vibrations) உருவாக்குவதும் சிரிப்புத்தான். ஆக, சிரிப்புக்கு இத்தனை சிறப்பா? என நீங்கள் சிந்திக்கலாம். உண்மையிலேயே சிரிப்புக்கு நிறையவே சிறப்புகள் உள்ளன. அதனால் தான் நகைச்சுவை மற்றும் சிரிப்பு நம் மனதிலும் உடலிலும் ஏற்படுத்தும் விளைவுகளை பற்றிய ஆய்வுக்கென Gelotology எனத் தனித் துறையே இருக்கிறது.

சிரிப்பு இதயத்துக்கு நல்லது. மன அழுத்தத்தால், குருதிக் குழாய்களின் உட்சுவரான என்டோதீலியம் (Endothelium) பழுதடையும். அப்படிப் பழுதடைந்தால், குருதிக் குழாய்களில் கொழுப்புப் படிவது அதிகரித்து, கடைசியில் மாரடைப்பும் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த மன அழுத்தத்தைப் போக்குவது நகைச்சுவை உணர்வு.

நாம் மனம் விட்டு, வாய் விட்டுச் சிரிக்கும்போது, மன அழுத்தத்தினால் சுரக்கும் Serum Cortisol என்ற ஹோர்மோனின் சுரப்பு வெகுவாகக் குறைகிறது.



மேலும், சிரிப்பு, நீரிழிவு நோயிலிருந்தும் பாதுகாக்கின்றது. இதனை உறுதிப்படுத்துமுகமாக ஜப்பானின் Tsukuba பல்கலைக்கழகத்தில் ஒரு சுவாரசியமான ஆய்வினை நடத்தினார்கள். இதன் போது நீரிழிவு நோயாளிகள் சிலரது குருதியை அவர்கள் உணவு உட்கொள்வதற்குமுன் பரிசோதனைக்கென எடுத்தார்கள். அதே நோயாளிகள் சாப்பிட்டபின் 40 நிமிடத்துக்கு அவர்களுக்கு சலிப்பை ஏற்படுத்து விதத்தில் உரையொன்றைக் கேட்க வைத்தார்கள். மீண்டும் அவர்களின் உடலிலிருந்து குருதியை எடுத்துப் பரிசோதித்தார்கள். இப்போது குருதியிலுள்ள சர்க்கரையின் அளவு வெகுவாக அதிகரித்திருந்தது. அதே நோயாளிகளிடமிருந்து மறுநாள் இரவு உணவுக்கு முன்பும் குருதி மாதிரியை எடுத்தார்கள். சாப்பிட்டபின் 40 நிமிடங்களுக்கு அவர்கள் ஒரு நகைச்சுவை நாடகத்தைக் கண்டுகளிக்கச் செய்தார்கள். மீண்டும் குருதிப் பரிசோதனை செய்யப்பட்டது. இப்போது அவர்களின் குருதியில் சர்க்கரையின் அளவு கணிசமாகக் குறைந்திருந்தது அவதானிக்கப்பட்டது. ஆகவே, இதிலிருந்து 'சிரிப்பு' நீரிழிவு நோயை விரட்டக்கூடிய சக்தி படைத்தது என்பது ஊர்ஜிதமானது.

அவ்வாறே, சிரிப்பு நல்ல உடற்பயிற்சியும் கூட! 100 முறை சிரிப்பது,10 நிமிடம் துடுப்பு போட்டுப் படகோட்டுவதற்குச் (Boating) சமம் என்றும் கூறப்படுகிறது.



## முடியவே முடியாது!

'முடியுமென்று நினைத்தால் முடியாதது எதுவுமில்லை' என்று கூறுவார்கள். ஆனால், உலகிலுள்ள எவராலும் செய்ய முடியாத செயல் ஒன்றுள்ளது. அதன்படி, உலகில் எந்த மனிதராலும் கண்ணைத் திறந்து கொண்டு செய்ய முடியாத அந்த செயல்தான் தும்முவது. சப்தமே கேட்காமல் தும்மினாலும் சரி, எங்கும் அதிரும்படி சத்தமாகத் தும்மினாலும் சரி, தன் தும்மலைத் தானே சகிக்காதது போல் தும்மும்போது நமது கண்கள் நம்மை அறியாமலேயே மூடிக்கொள்ளும்.

---


## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS SRI LANKA

# விஜய் உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2009

## குழுவாக செயற்படுவதன் மூலம் வினைத்திறனை அதிகரித்தல்



**தலைப்பு**

உற்பத்தித்திறன் கோட்பாட்டினை நாடு பூராவும் வியாபிக்கச் செய்வதில் செயற்படுகின்ற ஒரே அரச நிறுவனம் தேசிய உற்பத்தித்திறன் செயலகமேயாகும். இதன் கீழ் உற்பத்தித்திறன் மேம்பாட்டை கருத்திற்கொண்டு, 2009 ஆம் ஆண்டிலும் சித்திரப் போட்டியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

'குழுவாக செயற்படுவதன் மூலம் வினைத்திறனை அதிகரித்தல்' என்ற தலைப்பிலேயே போஸ்டர் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18X24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

**பாடசாலை பிரிவு 1 மற்றும் 2**

1 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 5,000 மற்றும் சான்றிதழ்

**பாடசாலை பிரிவு 3**

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

**பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்**

1 ஆவது பரிசு - ரூபா 25,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனித வள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன்படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2009.04.30**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

01. 1. மாவட்டம் ..........
போட்டிப் பிரிவு ..........
02. 1. முதல் பெயர்.......... (ஆங்கில தனியெழுத்தில்)
11. முழுப் பெயர் ..........
03. 1. முகவரி.......... (ஆங்கில தனியெழுத்தில்)
..........
..........
11. தொலைபேசி..........
04. வயது..........
05. 1. பாடசாலையின் பெயர்/முகவரி
..........
..........
11. வகுப்பு (தரம்) ..........
06. பல்கலைக்கழக மாணவர்களாயின்
1. பல்கலைக்கழகத்தின் பெயர்
..........
11. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
..........

..........
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

..........
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)

ஊடக அனுசரணை: விஜய் ITN Sri Lanka

மேலதிக விபரங்களுக்கு :-
தொலைபேசி 2812163/6, ஃபெக்ஸ் - 2812162, மின்னஞ்சல் - **nposl@nps.lk**

பரிசு அனுசரணை: O-KAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டவர்களுக்கெல்லாம் பணத்தை அள்ளிக் கொடுக்கும் அபூர்வ மனிதர்!

**அவர் தனது பெயரை வெளியிடுவதில்லை. முழுமையாக மூடாவிட்டாலும் தனது ஆளடையாளத்தை முழுமையாக வெளிப்படுத்தாத முகத்துடன் மக்கள் முன் தோன்றும் ஓர் அற்புத மனிதர். நியூயோர்க் நகரில் அடைக்கலமின்றி அல்லல்படும் அல்லது பணமில்லாமல் அலைந்து திரியும் எவரும் இவரிடம் பணம் கேட்டால் அவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவ இந்த அற்புதமான அபூர்வ மனிதர் முன்வருவது அனைவருக்கும் ஆச்சரியம் தரும் விடயமாக இருக்கின்றது.**

நியூயோர்க் நகரில் வாழும் இந்த தியாக உணர்வுள்ள கொடையாளியை 'பேல் அவுட் பில்' என்றே பெரும்பாலான மக்கள் அழைக்கின்றனர். நியூயோர்க் நகரின் 'டைம்ஸ்' சதுக்கத்தில் தங்கி இருக்கும் இவரிடம் ஏதாவது நன்கொடையை பெற்றுக்கொள்வதற்கு பெருந்தொகையானோர் கடும் குளிரையும் பொருட்படுத்தாது அதிகாலையிலேயே வரிசையில் காத்திருக்கின்றனர்.









உலகின் சக்தி வாய்ந்த பண பலம் மிகுந்த வல்லரசாகிய அமெரிக்காவில் கூட இனாமாக எதைக்கொடுத்தாலும் பெருந்தொகையானோர் அதனை வாங்குவதற்கு முண்டியடிப்பர் என்பதை இது உறுதிப்படுத்துகின்றது என செய்திகள் தெரிவிக்கின்றன.

சாதாரண உடை அணிந்து பெருத்த உடலமைப்பைக் கொண்ட இவர் கறுப்புக் கண்ணாடி அணிந்து 'வூல்' தொப்பியுடன் காணப்படுகின்றார். அவரின் நன்கொடையை பெறும் நோக்கத்துடன் சிலர் 5 மணித்தியாலங்களுக்கும் மேலாக வரிசையில் காத்திருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு 50 அமெரிக்க டொலர் பணமும் வேறு சில சந்தர்ப்பங்களில் அதைவிட அதிகமான தொகையும் பெறும் அரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

## பொருளாதார நெருக்கடியின் விளைவு

இவ்வாறு 'டைம்ஸ்' சதுக்கத்தில் வரிசையில் காத்திருப்பவர்களில் பெரும்பாலானோர் அண்மையில் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து பெரும் வீழ்ச்சி கண்டவர்கள் எனக் கருதப்படுகின்றது. இப்பொருளாதார நெருக்கடியால் நியூயோர்க் நகரவாசிகளில் ஆயிரக்கணக்கானோர் தமது தொழிலை இழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"இந்தச் செயலை நான் மிகுந்த நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதனை வினயமுடன் பார்க்கின்றேன். இப்பணத்தில் ஒரு பகுதியை எனது தாயாருக்கும் கொடுக்கமுடியும்" என்று 50 அமெரிக்கா டொலரை நன்கொடையாகப் பெற்ற லியோன் மெக்நேயில் குறிப்பிட்டார். இவர் கடந்த டிசம்பரில் தனது தொழிலை இழந்தவராவார்.

'பேல் அவுட் பில்' (Bail out Bill) குறித்த செய்திகள் தொலைபேசிகள் மூலம் விரைவாக அமெரிக்கா எங்கும் பிரசாரமாகின. மெக்நேயில் மேலும் தெரிவிக்கையில், முதன்முதலாக இச்செய்தி வெளிவந்ததும் நம்ப முடியாமல் இருந்ததாகவும். எனினும், 'டைம்ஸ்' சதுக்கத்தில் இதனைக் கண்ணுற்றபோது தான் அதை நம்பியதாகவும் கூறினார். பேல் அவுட் பில் Bail out Bill இன் இந்தச் செயல்பாட்டிற்குப் பின்னர் புதிதாக அறிமுகப்படுத்தப்படும். www.bailoutbooth.com எனும் இணையத்தளத்திற்கு பிரசாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கமும் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த இணையத் தளத்தின் வழியாக வீடியோ வர்த்தகப் பிரசார நடவடிக்கை, சேவை மற்றும் தனியார் செய்திப் பரிமாற்றத்தையும் மேற்கொள்ளலாம்.

அமெரிக்க அரசால் வங்கி மற்றும் வேறு பல நிறுவனங்களில் பிணை உறுதியை வெளிப்படுத்தி பொருளாதாரத்தைப் பலப்படுத்த மேற்கொள்ளப்படும் கடும் முயற்சியாகவும் சாதாரண பொது மக்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும் வளப்படுத்தவும் மேற்கொள்ளும் முயற்சி எனவும் இதனைக் கருத முடியுமென டிரிவ் டைபஸ் எனும் நியூயோர்க் நகரின் விசேட பேச்சாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "இப்பொழுது அமெரிக்காவில் பல நகரங்களில் 500,000 அமெரிக்க டொலர் பணம் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். அத்துடன், சுப்பர் போல் விளையாட்டுப் போட்டிகளின் இடைநடுவே தொலைக்காட்சியில் காட்டப்படும் வர்த்தக விளம்பரத்தைவிட இந்த 'பண நன்கொடை' யுக்தி மிகுந்த வினைத்திறன் மிக்கதாகக் கருதுகின்றேன்" என அவர் தெரிவித்தார். அத்துடன், உண்மையில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நபர்களுக்கு உதவி அளிக்கும் வாய்ப்பும் கிடைப்பதாக அவர் கருதுகின்றார்.

'பேல் அவுட் பில்' இடம் பணத்தைப் பெற வருவோர், அவர் அருகில் இருக்கும் அவரின் உதவியாளரிடம் தான் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை முன் வைக்கவேண்டும். அதனைப் படம் எடுப்பதோடு மைக்ரோபோனின் உதவியுடன் அது பிரசாரப்படுத்தப்படும். "எனது தயார் கடந்த ஒரு சில நாட்களுக்கு முன் நோய் காரணமாக படுக்கையிலேயே இறந்தார்...." என மரியோ கூறினார். 'கௌபோய்' சப்பாத்துக்களை அணிந்திருந்த அவரைப் பார்த்த மாத்திரமே பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் ஒருவராக காட்சி அளித்தார்.

'பேல் அவுட் பில்' என்ன கூறுகின்றார் என நாம் இப்பொழுது பார்ப்போம். அவரின் பேச்சை செவிமடுத்த உதவியாளர் இப்படிக் கூறுகிறார். "நான் அவருக்கு 150 அமெரிக்க டொலர் கொடுப்பேன்" என பில் கூறுகின்றார்.

ஈராக்கில் யுத்தத்தில் சம்பந்தப்பட்டவரான கர்ட்ஸ் தனது சோக வரலாற்றைக் கூறினார். தான் 500 அமெரிக்க டொலரை சம்பாதித்தாலும் அது தனது வைத்திய செலவை மேற்கொள்ளப் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்தார். அவருக்கு 50 அமெரிக்க டொலர்கள் நன்கொடையாகக் கிடைத்தது.

வீடொன்றில்லாமல் தவித்த ஜுஆன் வெஸ்குவிஸ் 100அமெரிக்க டொலர்களை பேல் அவுட் பில்லிடம் இருந்து பெறும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளார். சமீபத்தில் நியூயோர்க் நகரில் தனது நன்கொடை நடவடிக்கைகளை முடித்துக்கொண்ட 'பேல் அவுட் பில்' அடுத்ததாக வொஷிங்டன், பொஸ்டன், பிலடெல்பியா ஆகிய நகரங்களில் இதேபோல் தோன்றி தனது நன்கொடை நடவடிக்கைகளைத் தொடர உள்ளார். மிகப் பெரிய கால்சட்டைப் பைகளை பணத்தால் நிரப்பியபடி இருக்கும் இந்த அற்புத மனிதர் தனது பெயரை வெளியிடாதது ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இச்செயற்பாட்டில் மிகுந்த கவனம் தேவை, அவரிடம் பணம் இருக்கும் விடயம் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இதனால் எதுவும் நடக்கலாம் என டைபஸ் தெரிவித்தார்.

எவராகிலும் இவரிடம் பணத்தைத் திருட முயன்றால் அது இலகுவான காரியமாக இருக்காது. ஏனெனில், இவருக்கு அருகில் எப்பொழுதும் உலாவித் திரியும் நல்ல உடல் திடகாத்திரமுள்ள ஆண்களைக் காணலாம். அவர்கள்தான் 'பேல் அவுட் பில்' அவர்களின் தனிப்பட்ட பாதுகாவலர்கள். அவர்கள் சாதாரண மக்களை போல் இருந்தாலும் ஆயுதபாணிகள். இதனால், இந்த இடத்திலோ அல்லது வேறு இடங்களிலோ 'பேல் அவுட் பில்' அவர்களின் பாதுகாப்புக் குறித்து தேவையற்ற அச்சம் கொள்ள தேவையில்லை என நியூயோர்க் நகரப் பொலிஸ் நிலையப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

-ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓஷ்யானியா



மத்திய மற்றும் தென் பசுபிக் சமுத்திரத்தில் சிதறிக்கிடக்கும் பல தீவுகளைக் குறிக்கும் சொல்லே 'ஓஷ்யானியா' (Oceania) ஆகும். இத்தீவுகளுள் அவுஸ்திரேலியா எனும் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட நாடும் அதன் அருகிலுள்ள நியூசிலாந்து நாடும் அடங்குகின்றன.

1831 இல் பிரெஞ்ச் நாடுகாண் பயணியான டுமொன்ட் டி எர்வில் என்பவரே 'ஓஷ்யானியா' எனும் சொல்லை அறிமுகப்படுத்தினார். ஓஷ்யானியா பகுதியில் ஏறக்குறைய 25,000 தீவுகள் வரை அமைந்துள்ளன. இத்தீவுகளில் பெரும்பாலானவை பிரித்தானியா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் ஆதிக்கத்திற்குட்பட்டவை. இவற்றை 'பசுபிக் தீவுகள்' எனவும் அழைப்பதுண்டு.




ஓஷ்யானியாவை அவுஸ்திரலேசியா (Australasia), மெலனேசியா (Melanesia), மைக்ரோனேசியா (Micronesia), பொலினேசியா (Polynesia) என நான்கு உட்பிரிவுகளாகப் பாகுபடுத்தும் ஒரு பழங்கால முறையும் வழக்கத்தில் உள்ளது. எனினும், ஓஷ்யானியா ஒரு தனிக்கண்டமாக அங்கீகரிக்கப்படவில்லை. மாறாக, ஓஷ்யானியா பிரிவில் அடங்கியுள்ள அவுஸ்திரேலியாவே ஒரு தனிக் கண்டமாகக் கருதப்படுகின்றது.

## அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா ஒரு கண்டமாகவும் அதேவேளை, ஒரு தனிநாடாகவும் விளங்குகின்றது. பரப்பளவைப் பொறுத்தவரையில் இது உலகின் ஏழாவது கண்டமாகும்.

## எல்லைகள்

இந்து சமுத்திரத்திற்கும் தென் பசுபிக் கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது.

மொத்த நிலப்பரப்பு: 77,13,000 சதுரக் கிலோமீற்றர் (தஸ்மானியாவின் 67800 சதுரக் கிலோமீற்றர் உட்பட)
கிழக்கு-மேற்குத் தூரம் : 3983 ச.கி.மீற்றர்
வடக்கு-தெற்குத் தூரம் : 3183 கி.மீற்றர்
கடற்கரையின் நீளம்: 27948 கி.மீற்றர்

## கலாசாரம், மதம் மற்றும் மொழி

ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் பிரித்தானியாவின் காலனித்துவ நாடுகளாக இருந்தன. இதனால், பிரித்தானிய கலாசாரங்களையே பெரும்பான்மையாக இங்கு காணலாம்.

கிறிஸ்தவம் பிரதான மதமாக விளங்குவதோடு, ஏனைய மதங்களைப் பின்பற்றுவோரும் கணிசமான அளவில் வாழ்கின்றனர்.

இந்நாடுகளின் பிரதான மொழியாக ஆங்கிலம் திகழ்கின்றது. தவிர, மேலும் பல நாடுகளில் சுதேச மொழிகளும் பாவனையிலுள்ளன. அத்துடன், வேறுநாடுகளில் இருந்து இங்கு குடியேறிய வேற்றுநாட்டு மொழிகளை பேசுவோரும் வாழ்கின்றனர்.

## வரலாறு

'உலகின் விவசாய பூமி' என சிறப்பித்துக் கூறப்படும் அவுஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதியில் சுமார் 40,000 வருடங்களுக்கு முன் ஆசிய பூர்வீகக் குடிகள் குடியேறின. கெப்டன் ஜேம்ஸ் குக் இதை பிரித்தானியாவின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். அதன்பின்னர் அவுஸ்திரேலியா ஆறு பிரித்தானிய காலனிகளாகப் பிரிக்கப்பட்டது. நியூ சவுத் வேல்ஸ், விக்டோரியா, குவீன்ஸ்லாந்து, சவுத் அவுஸ்திரேலியா, வெஸ்டேர்ன் அவுஸ்திரேலியா, தஸ்மானியா என்பனவே அந்த ஆறு காலனிகளுமாகும். பின்னர் இவை அனைத்தும் இணைந்து 1901 இல் 'கொமன் வெல்த் ஒஃப் அவுஸ்திரேலியா'வாக உருவெடுத்தது. இதன்போது பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியே தேசாதிபதியாக இருந்தார். நாட்டை பிரித்தானியாவிடம் இருந்து முற்றாக விடுவித்து ஒரு குடியரசாக மாற்றவேண்டும் என்ற முயற்சி 1999 இல் தோல்வியில் முடிவடைந்தது.







## க்ரேட் பெரியர்

அவுஸ்திரேலியாவின் சிறப்பம்சங்களில் ஒன்றுதான் இந்த 'க்ரேட் பெரியர்' பவளப் பாறையாகும். உலகில் மிகப்பெரிய பவளப் பாறைகளுள் இதுவும் ஒன்று. அவுஸ்திரேலியாவின் வட கிழக்கே குவீன்ஸ்லாந்து கடல் பகுதியின் பவளக் கடலில் 2000 கிலோமீற்றர் நீளமுடைய இந்தப் பாறை பரவிக் கிடக்கின்றது. இதிலிருந்து வருடமொன்றிற்கு 50 கோடி தொன் கல்சியம் உற்பத்தியாவதாகக் கூறப்படுகின்றது. உலகக் கடல் உயிரிகளில் மூன்றில் ஒரு பகுதி இது போன்ற பவளப்பாறைகளிலேயே உள்ளன. 'க்ரேட் பெரியர்' பவளப்பாறையானது சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமியாகத் திகழ்கின்றது.

## முக்கியமானவை

மெல்போர்ன், கென்பரா, அடிலைட், சிட்னி, பிட்ஸ்பேர்ன் என்பன அவுஸ்திரேலியாக் கண்டத்தின் முக்கிய நகரங்களாகத் திகழ்கின்றன. அவ்வாறே, மரே டார்லிங், லாச்லோன், ஃப்ளின்டர்ஸ், டயமென்ஷினா, எஷ்பாடன், ஃபிட்ஸ் ரோய் என்பன இதன் முக்கிய நதிகளாகும்.

### அவுஸ்திரேலியாக் கண்டத்துக்குட்பட்ட நாடுகள்

- அவுஸ்திரேலியா
- கிரிபேடி
- டுவலூ
- டொங்கா
- நௌரு
- நியூசிலாந்து
- வெனுவடு
- செமோவா
- பெலொவ்
- ஃபிஜி தீவுகள்
- மார்ஷல் தீவுகள்
- மைக்ரோனேஷியா
- சொலமன் தீவுகள்
- பெபுவா நியூகினி

### பிற நாடுகளின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஓஷ்யானிய தீவுகள்

- நியூ கெலிடோனியா (பிரான்ஸ்)
- குவாம் (ஐக்கிய அமெரிக்கா)
- வேக் தீவுகள் (ஐக்கிய அமெரிக்கா)
- அமெரிக்க செமோவா (ஐக்கிய அமெரிக்கா)
- செதம் தீவுகள் (நியூசிலாந்து)
- குக் தீவுகள் (நியூசிலாந்து)
- ஈஸ்டர் தீவுகள் (சிலி)
- பிரெஞ்ச் பொலினேசியா (பிரான்ஸ்)
- ஹவாய் (ஐக்கிய அமெரிக்கா)
- லோயல்டி தீவுகள் (பிரான்ஸ்)
- நியூ (நியூசிலாந்து)
- பிட்கேய்ன் தீவுகள் (ஐக்கிய ராச்சியம்)
- டொகெலோ (நியூசிலாந்து)
- வெலிஸ் மற்றும் பியுடுனா (பிரான்ஸ்)

மரே டார்லிங் நதி





ஃபிஜி தீவுகள்

பவளப்பாறைத் தொகுதி




சிட்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதைகளால் உலகை வென்ற ஹேன்ஸ் கிறிஸ்டியன் எண்டர்ஸன்





சிறுபிள்ளைகளின் மனதைக் கொள்ளை கொண்ட பல அற்புதக் கதைகளுக்கு சொந்தக்காரர்தான் ஹேன்ஸ் கிறிஸ்டியன் எண்டர்ஸன். இவர் குழந்தைகளின் மனதை நன்கு புரிந்து வைத்திருந்தார். பிள்ளைகளின் மனதை நன்கு அறிந்து, அவர்களுக்கேற்ற விதத்தில் கதைகளை எழுதுவதில் அவருக்கிருந்த திறமை அலாதியானது. சின்னஞ்சிறிய தேவதைக் கதைகளால் சிறுவர்களின் அளவில்லா அன்பிற்குப் பாத்திரமானார்; அழியாப் புகழும் பெற்றார்.

'பாடசாலையிலுள்ள ஏனைய பிள்ளைகளைவிட வயதில் கூடியவராக இருந்தமையால் பிள்ளைகளதும் ஆசிரியர்களதும் ஏளனத்துக்கு எண்டர்ஸன் ஆளானார். இதனால், அவர் மிகவும் மனமுடைந்தார்'

## சிறுபராயம்

டென்மார்க் நாட்டிற்கு அருகிலுள்ள ஃபைன் எனும் தீவில் ஒடென்ஸ் எனும் மீனவக் கிராமம் அமைந்துள்ளது. அங்கு 1805 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஹேன்ஸ் கிறிஸ்டியன் எண்டர்ஸன் பிறந்தார். தனது பாட்டியிடம் புராதன கதைகளையும் சிறுவர் கதைகளையும் ஜனரஞ்சகக் கதைகளையும் கேட்பதில் சிறுவன் எண்டர்ஸன் பெரிதும் அக்கறை கொண்டான். அவ்வாறே, வீட்டின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பொம்மலாட்ட நாடக அரங்கில் நாடகங்கள் நடிப்பதற்கும் அவர் பழகிக் கொண்டார்.

எண்டர்ஸனுக்கு பதினொரு வயதாக இருக்கும்போது துரதிர்ஷ்டவசமாக அவரது தந்தையார் இறந்துவிட்டார். அதனால், வாழ்க்கையை ஓட்டிச் செல்வதற்கு அம்மாவுக்கும் பாட்டிற்கும் அதிக நேரம் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால், எண்டர்ஸன் அதிக நேரத்தை தனிமையில் கழிக்க வேண்டியநிலை ஏற்பட்டது. பாடசாலைக்குச் சென்ற எண்டர்ஸன், அங்கு படிப்பதற்குப் பதிலாக கதைகளைப் பற்றிய கனவுலகில் சஞ்சரித்தார். படிப்பதில் அக்கறை காட்டாது நாடகத்துறையிலேயே தனது கவனத்தைச் செலுத்தினார்.

இந்த நாடகப் பித்தில் இருந்து தனது மகனை விடுவிக்க வேண்டுமென நினைத்து எண்டர்ஸனின் தாயார் ஆரம்பத்தில் அவரை நெசவாளர் ஒருவரிடமும் பின்னர் புகையிலைக்காரர் ஒருவரிடமும் இறுதியில் தையல்காரர் ஒருவரிடமும் பயிற்சி பெற அனுப்பினார். எனினும், இவை எவற்றிலுமே எண்டர்ஸன் நாட்டம் கொள்ளவில்லை. அவரது மனமோ நூல்களிலும் நாடகங்களிலும் கதைகளிலுமே நாட்டம் கொண்டது.

## கொபன்ஹேகன் நோக்கிய பயணம்

தனது 14 ஆவது வயதில் தனது கிராமத்தை விட்டு டென்மார்க் நாட்டின் தலைநகரான கொபன்ஹேகனுக்குச் சென்றார். அப்பயணம் அவரது வாழ்க்கையின் போக்கையே மாற்றியமைத்தது. ஆனால், ஆரம்பத்தில் நாடகக் குழுவில் இணைந்து பணியாற்ற விரும்பிய போதும் எந்தவொரு பலனும் கிடைக்கவில்லை.

இறுதியில் அவர் எழுதிய நாடகமொன்றை அரச நாடக அரங்கொன்றின் பணிப்பாளராகிய ஜொனாசே கொலின்ஸ் என்பவர் தற்செயலாக வாசித்தார். எண்டர்ஸன் முறையான கல்வியறிவுடையவராக இல்லாதபொழுதிலும் திறமை மிகுந்தவர் என்பதை கொலின்ஸ் அப்போது புரிந்து கொண்டார். அவர் அரசனிடம் பணம் பெற்று எண்டர்ஸனை பாடசாலைக்கு அனுப்பினார்.

எனினும், பாடசாலையிலுள்ள ஏனைய பிள்ளைகளைவிட வயதில் கூடியவராக இருந்தமையால் பிள்ளைகளதும் ஆசிரியர்களதும் ஏளனத்துக்கு எண்டர்ஸன் ஆளானார். இதனால், அவர் மிகவும் மனமுடைந்தார். எண்டர்ஸனுக்கு ஏற்பட்ட துயரங்களை அறிந்த கொலின்ஸ், அவரைப் பாடசாலையில் இருந்து விலக்கி, தனிப்பட்ட ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைத்துக் கற்பித்தார்.

கொலின்ஸின் இந்த முயற்சியால் உற்சாகமடைந்த எண்டர்ஸன் மிக அக்கறையுடன் கல்வி கற்றார். இதன் காரணமாக 1828 இல் கொபன்ஹேகன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்.

## படைப்புகள்

1829 முதல் கிறிஸ்டியன் எண்டர்ஸன் தனது படைப்புகளை டென்மார்க் மொழியில் (டெனிஷ் மொழி) எழுதி வெளியிட ஆரம்பித்தார். 1833 இல் அந்நாட்டு மன்னர் எண்டர்ஸனை வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொள்ள அனுப்பி வைத்தார். அதன்படி, 16 மாதங்களாக ஜேர்மனி, பிரான்ஸ்,சுவிற்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு சென்றுவந்தார். அதனையடுத்து கவிதைகள்,நாடகங்கள், புனைகதைகள் மற்றும் பயணக் கட்டுரைகள் என பல படைப்புகளை எழுதினார்.

## கதைகளின் ஆரம்பம்

1835 இல் எண்டர்ஸன் சிறுவர்களுக்கென நான்கு தேவதைக் கதைகளை 'Fairy Tales Told for Children' எனும் பெயரில் முதன்முதலாக வெளியிட்டார். அந்த நான்கு குறுங்கதைகளையும் வாசித்ததில் பெருமகிழ்ச்சி அடைந்த சிறுவர்களும் பெரியோர்களும் அவ்வாறான கதைகளை மேலும் நாடினர். அதனையடுத்து அவர் மேலும் 168 சிறுவர் கதைகளை எழுதி வெளியிட்டார்.

## எண்டர்ஸனின் உலகப் புகழ் வாய்ந்த தேவதைக் கதைகள் சில...

- உறுதியான டின் ராணுவ வீரன். (The Steadfast Tin Soldier)
- பனியரசி.(The Snow Queen)
- பன்றி மேய்ப்பவன். (The Swineherd)
- த நைட்டிங்கேல்.(The Nightingale)
- சிறிய கடற்கன்னி. (The Little Mermaid)
- சக்கரவர்த்தியின் புதிய உடைகள். (The Emperor's New Clothes)
- அவலட்சணமான வாத்து. (The Ugly Duckling)

போன்றவை சிறுவர்களுக்காக இவர் எழுதிய சிறந்த சிறுகதைகளாகப் போற்றப்படுகின்றன.

## மறைவு



ஹேன்ஸ் கிறிஸ்டியன் எண்டர்ஸன்

பிள்ளைகளின் மனதை நன்கு அறிந்து, அவர்களுக்கேற்ற விதத்தில் கதைகளை எழுதி வந்த இவர், 1875 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

-ஜெ



எண்டர்ஸனின் கல்லறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்கால ராட்சத
# எதிர்காலத்திலும்

**டைனோசர்கள் 'ஜுராசிக் பார்க்' எனும் திரைப்படத்தில் தோன்றி உலகை உலுக்கினவே அது உங்கள் ஞாபகத்தில் இருக்கின்றனவா? அன்று அவ்வாறான ராட்சத விலங்குகள் திரைப்படத்தில் மட்டுமே உருவாக்கப்பட்டிருந்தன. எனினும், நிஜத்தில் இவ்வாறான விலங்குகளை எமது கண்முன் சிருஷ்டிக்க இதுவரை எமது விஞ்ஞானிகளால் முடியவில்லை.**



எனினும், இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகளுக்குள் அத்தகைய நிலை ஏற்படலாம் என அமெரிக்க விஞ்ஞானிகளில் சிலர் செய்த உயிரியல் உற்பத்தி பற்றிய புதிய ஆராய்ச்சியின் அனுமானங்கள் புலப்படுத்துகின்றன.இந்த ஆராய்ச்சியின் வெற்றியால் முற்காலத்திலிருந்த ராட்சத விலங்குகள் பலவற்றை இவ்வுலகில் மீண்டும் காணும் வாய்ப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு, விஞ்ஞானிகளால் உருவாக்கப்படவிருக்கும் முற்கால ராட்சத விலங்குகளின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது,பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் வாழ்ந்து-அழிந்து போனதாக நம்பப்படும் 'மெமத்' எனும் ராட்சத மிருகமேயாகும். உடல் முழுக்க ரோமங்களால் போர்த்தப்பட்டு,நீண்ட- வளைந்த தந்தத்தோடு,பாரிய தோற்றத்தையுடைய இந்த விலங்கு உயரத்தில் 8 அடி முதல் 14 அடி வரை இருக்கும். இந்த 'ராட்சத மெமத்' உயிரினத்தின் மூன்று பில்லியன் உயிரணுக்களைக் கொண்ட உயிரணுக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் தற்போது வெற்றி பெற்றுள்ளனர்.

அமெரிக்க பென்செல்வேனியா பல்கலைக்கழகத்தின் உயிரியல் ஆராய்ச்சியாளரான ஷுஸ்டர்கே எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்றில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில், அவரும் இந்த ஆராய்ச்சி நடவடிக்கையின் ஒரு பங்காளியாவார். கோடிக்கணக்கான டொலர்கள் செலவிடப்பட்டுள்ள இந்த புது ஆராய்ச்சியினூடாக இவ்வாறான ராட்சத உயிரினங்களின் பரிணாம மாற்றத்துக்கும் அழிந்து போனதற்கான பல காரணங்களையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.


யாகோஃப் எனப் பெயரிடப்பட்ட மெமத் உறைந்திருந்ததாகக் கூறப்படும் பனிப்பாறை

## யாகோஃபின் அதிர்ஷ்டம்

1997 இல் ஒருநாள் ஒன்பது வயது ஜெனார்ட் யாகோஃப் சமவெளியினூடாக பனிமான்களைத் தேடிச் சென்று கொண்டிருந்தான்.யாகோஃபின் கோத்திரத்தினர் பனிமான்களை வளர்த்து வருவதை தமது நெடுநாள் தொழிலாகக் கொண்டிருந்தனர்.துரதிஷ்டவசமாக அன்று அவனுக்கு ஒரு பனிமானேனும் அகப்படவில்லை. எனினும், அன்று மாலை வெறுங்கையுடன் வீடு செல்லும் நிலை அவனுக்கு ஏற்படவில்லை. ஏனெனில், அவனது எதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் இருந்தபோது, தூரத்திலிருந்த ஒரு மலைமீது அவனது கவனம் திரும்பியது.

அதனை உற்று அவதானித்தபோது அதில் ரோமங்கள் இருப்பது போன்று தெரிந்ததால் அது ஒரு மலையன்று என யாகோஃபினால் ஊகிக்க முடிந்தது. மகிழ்ச்சியில் திளைத்த அவன் அந்த உருவத்தின் அருகில் சென்றான். அருகில் சென்று பார்த்தபோது பாரிய தந்தங்கள் இரண்டு பனிக்குள் உறைந்து போயிருக்கின்றமை தெரிந்தது. அவை பூரண வளர்ச்சியடைந்தவையாகவும் உருக்குலையாதவை என்பதும் அதன் அருகில் சென்ற பிறகுதான் அவனுக்குப் புரிந்தது. அவற்றைப் பார்த்த மாத்திரத்தில் அவற்றை ஆயிரம் டொலர்களுக்கு விற்கலாம் என்று யாகோஃபுக்குத் தோன்றியது. விரைவாகச் சென்று தன் குடும்பத்தினரை அங்கு அழைத்து வந்தான். பிறகு யாகோஃபும் அவனது குடும்பத்தினரும் பனிக்குள் உறைந்திருந்த அந்த யானைத் தந்தங்களை வெளியே எடுத்து, அவற்றை விற்றுவிடத் தீர்மானித்தனர்.

## பிரெஞ்ச் விலங்கியல் ஆய்வாளர்

அந்தத் தந்தங்கள் பலரிடம் கைமாறிய பிறகு எப்படியோ பிரெஞ்ச் விலங்கியல் ஆய்வாளரான பேர்னாட் புய்குய்ஸின் கவனத்துக்கு வந்தது. அவற்றைக் கண்டதும் அந்தத் தந்தங்கள் யானையை ஒத்த ஒரு பாரிய விலங்கினுடையது என்றும் அது தன் உடல் முழுவதும் ரோமங்களாக மூடப்பட்ட 'வூலி மெமத்' எனும் விலங்கினுடையது என்றும் புய்குய்ஸுக்கு தெளிவாகப் புரிந்தது.

## மெமத்தின் முழுமையான உடல்

இரு தந்தங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட புய்குய்ஸ் உடனே ஜெனார்ட் யாகோஃபோடு மெமத்தின் உடல் இருந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டார். அங்கு அவருக்கு பனியால் மூடிய ஓர் இடத்தையே காண நேர்ந்தது. அவ்விடத்தைப் பார்த்தவுடன் அங்கு மெமத் ஒன்றின் உடல் பனிக்குள் உறைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றியது. பின்னர் தனது ஊகம் சரியானது என அங்கு மேற்கொண்ட அவதானிப்புகளை அடுத்து உறுதியாகியது. அத்தோடு, உருக்குலையாத மெமத் ஒன்றின் உடலை முதல் தடவை காண்பது இதுவே முதற் சந்தர்ப்பம். அத்துடன், அந்த விலங்கின் ரோமங்கள்கூட பழுதடையாத நிலையில் பாதுகாப்பாக இருந்ததைக் கண்ட புய்குய்ஸ் மிகவும் ஆச்சரியமடைந்தார்.

## ஹெலிகொப்டரில் சென்

புய்குய்ஸ் அங்கு கண்ணுற்ற மெமத்துக்கு 'யாகே
அன்றுவரை பனியில் உறைந்து, உருக்குலையாத அ
இனிவரும் காலங்களிலும் பாதுகாப்பாக வைத்திரு
புய்குய்ஸுக்கு பாரிய சவாலாக இருந்தது. எனினு
பொறுப்பேற்ற புய்குய்ஸ்ஸின் அகழ்வாராய்ச்சிக் கு
23 தொன் மண்ணையும் தோண்டி வெளியே எடுத்
மணல் பாறையை 1999 நொவெம்பர் மாதம் ஹெ
மைல்களுக்கு அப்பாலிருந்த பனிக்குகை ஒன்றுக்கு

## உறைபனி நீக்

அங்கே அவர்கள் பணியாளர்கள் சிலரை நியமித்
Drier) ஐப் பயன்படுத்தி, மெமத்தின் உடலை மூடி
நீக்கலாயினர். இவ்வாறு ஒன்றரை வருடங்கள் கழி
அவ்வுடலை மூடியிருந்த உறைபனியில் 1/4 பங்க

## உண்ணிகளும் புல்பூ

யாகோஃபின் தேடுதலே மேற்படி மெமத் பற்றிய
டியது. அதனால், எதிர்காலத்தில் உயிரணுக்கள் மூல
மெமத் இவ்வுலகில் சஞ்சரிப்பதைக் காணப் பலரு
கூட அதுபற்றிய அக்கறை விஞ்ஞானிகளிடம் இரு
தற்போது அவர்களின் கவனமோ உறைபனியில் அ
ரோமங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள உ
காலடியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட புல்பூண்டு

## எந்தளவு பெரி


சைபீரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட 'யாகோஃப்'
எடை கொண்டிருந்தது. உயரம் 11 அடி. இதேவே
மெமத்களின் உடல் எடை 10 தொன் ஆகவும் உய
இருந்ததாகக் கூறப்படுகிறது.

## எப்போது வாழ்ந்

2 மில்லியன் ஆண்டுகள் முதல் 9,000 ஆண்டுக
வாழ்ந்திருக்கின்றன. கண்டுபிடிக்கப்பட்ட இந்த மெ
கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்த மெமத் 20,3
இறந்து போயிருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது
மெமத் கூட்டம் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு அழி
'பேரிங்' எனும் சமுத்திர வலயத்திலுள்ள ரெங்கெல்
வந்துள்ளன. அது எகிப்தில் பிரமிட்டுக்கள் மற்றும்
ஸ்டொன்ஹென்ஜ் நினைவுத்தூபிகள் நிறுவப்பட்ட
கூறப்படுகின்றது.



பனிக்கால மக்களையும் உயிரினங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 10,000 B.C எனும் ஹொலிவூட் திரைப்படத்துக்கான சுவரொட்டி ஒன்று


அமெரிக்க கிழக்கு யூடா பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ள மெமத் எலும்புக்கூடு


மெமத்தின் தந்தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த விலங்குகள் ம் பிறக்குமா?




'ஹெயார் ட்ரயர்' மூலம் உறைபனி அகற்றப்படும் காட்சி, வலது பக்க மூலையிலுள்ள படத்தில் அதன் ரோமங்களில் காணக்கிடைத்த உண்ணி மற்றும் புல்பூண்டுகள்

## ரில் சென்ற யாகோஃப்

மெமத்துக்கு 'யாகோஃப்' எனப் பெயரிட்டார். உருக்குலையாத அந்த மெமத்தின் உடலை காப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது இருந்தது. எனினும், அந்த சவாலைப் அகழ்வாராய்ச்சிக் குழுவினர், அந்த உடலோடு டி வெளியே எடுத்தனர். பிறகு அந்தப் பாரிய ம்பர் மாதம் ஹெலிகொப்டரில் 200 ரிக்குகை ஒன்றுக்கு எடுத்துச் சென்றனர்.

## றுபனி நீக்கம்

கள் சிலரை நியமித்து, 'ஹெயார் ட்ரயர்' (Hair தின் உடலை மூடியிருந்த உறைபனியை ர வருடங்கள் கழிந்த நிலையில் இவர்களால் பனியில் 1/4 பங்கையே அகற்ற முடிந்தது.

## நும் புல்பூண்டுகளும்

படி மெமத் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு வழிகாட் உயிரணுக்கள் மூலம் உருவாக்கப்படவுள்ள தக் காணப் பலரும் ஆர்வத்துடன் இருந்தாலும் ஞானிகளிடம் இருக்கவில்லை. காரணம், உறைபனியில் அமிழ்ந்திருந்த மெமத்தின் க்கப்பட்டுள்ள உண்ணிகள் மற்றும் அதன் ப்பட்ட புல்பூண்டுகளிலேயே தங்கி இருந்தது.

## ளவு பெரியது?

பட்ட 'யாகோஃப்' எனும் மெமத், 6 தொன் 1 அடி. இதேவேளை, நன்கு வளர்ந்த சில தான் ஆகவும் உயரம் 14 அடியாகவும்

## து வாழ்ந்தது?

9,000 ஆண்டுகள் வரை மெமத்கள் உலகில் கப்பட்ட இந்த மெமத்திற்கு சுமார் 47 வயதிருக் இந்த மெமத் 20,380 ஆண்டுகளுக்கு முன் கிக்கப்படுகின்றது. கடைசியாக எஞ்சியிருந்த ளுக்கு முன்பு அழிவடைந்துள்ளன. அவை திலுள்ள ரெங்கெல் எனும் தீவிலேயே வாழ்ந்து பிட்டுக்கள் மற்றும் இங்கிலாந்தில் கள் நிறுவப்பட்ட காலகட்டமாகும் எனக்

## எங்கே வாழ்ந்தது?

மெமத்கள் முதலில் ஆபிரிக்காவிலேயே வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. காலப்போக்கில் ஐரோப்பாவுக்கும் சைபீரியாவுக்கும் இடம்மாறி, தரைவழிப்பாதையூடாக அலஸ்காவுக்குச் சென்றுள்ளன. இறுதியில் வடக்கு மற்றும் தென் ஆபிரிக்காவில் வாழப் பழகியுள்ளன.

## எப்படி இறந்தது?

மெமத்கள் உலகிலிருந்து அழிந்து போனமை பற்றி மூன்று கருத்துக்கள் நிலவுகின்றன. அவையாவன;

1. மாமிசம் மற்றும் ரோமங்களின் தேவைக்காக அவை மனிதனால் அளவுக்கு மீறி வேட்டையாடப்பட்டமை.
2. அதிகரித்த குளிரைத் தாங்க முடியாமல் அழிவுக்குள்ளாகியமை.
3. ஒருவித வைரஸ் நோயின் தாக்கத்திற்குப் பலியாகின. என்பனவே அம்மூன்று கருத்துக்களுமாகும்.

## மெமத், யானையின் மூதாதையா?

இல்லை. எனினும் மெமத்துக்கும் தற்போது நாம் காணும் (ஆசிய, ஆபிரிக்க) யானைகளுக்கும் பொதுவான மூதாதை இனமொன்று இருந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.



மெமத்தின் ஓவியம் (இடது), சைபீரியாவின் டைமீர் குடாநாட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட 100 இற்கும் அதிகமான தந்தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சென்ற வாரத் தொடர்ச்சி....)

தந்தையையும் தம்பியையும் பிரிந்து வந்த ரமேஷ் காலப் போக்கில் சொத்துசுகங்களை இழந்து ஒருவேளை சோற்றுக்குக் கூடக் கஷ்டப்பட்டான். பன்றி மேய்த்தும், ஆடு, மாடு மேய்த்தும் வயிற்றுப்பசியை தீர்த்துக்கொண்டான். தான் செய்த தவறுகளை என்று நினைத்தபோது அவனுக்கு தந்தையினதும் தம்பியினதும் நினைவே வந்தது.

தான் எவ்வாறு தன் தந்தையின் முகத்தில் விழிப்பது என்று மனம் வருந்தியபடி இருந்தான். பின்னர் மனதை திடப்படுத்திக்கொண்டு தந்தையையும் தம்பியையும் சந்திப்பதற்கு முடிவெடுத்து வீட்டுக்குப் புறப்பட்டான். அங்கு சென்றபோது அவன் கண்ட காட்சி அவனை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது.

காரணம் அங்கு அவன் தந்தையின் போட்டோவில் மாலை போடப்பட்டிருந்தது. தந்தை காலமாகிவிட்டார்

# தெளிந்தது அறிவு

நினைத்து மனம் வருந்திய அவன் தன்னைத் தானே திட்டிக்கொண்டான். தந்தையின் சொல்லைத் தட்டியதனால் தான் தனக்கு இந்த நிலை என்று நினைத்து விம்மி விம்மி அழுதான். கல்வி அறிவோ, தொழில் அனுபவமோ இல்லாத தான் இனி எவ்வாறு வாழ்வது




என்றறிந்த அவன் கண்களில் இருந்து முத்து முத்தாகக் கண்ணீர் சிந்தியது. அவ்வேளை, வீட்டின் வாயிலுக்கு வந்த அவனை தம்பி சுரேஷ் கண்டதும் மகிழ்ச்சியடைந்து அவனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தான். "எனக்கு உறவென்பதற்கு நீ மட்டும் தான் அண்ணா இருக்கிறாய். நீயும் என்னை விட்டுப் போய்விடாதே" என்று கூறி அவனை உள்ளே அழைத்துச் சென்றான். தம்பியின் அன்பைக் கண்டு அவன் உள்ளம் உருகினான். "சொத்துக்களை எல்லாம் அழித்து ஒருவேளை சோற்றுக்குக் கூட வழியில்லாமல் திரிந்த என்மீது இரக்கம் காட்டி எனக்கு வாழ்வளிக்க முன் வந்துள்ளானே. இவனையா அநாதை என்று திட்டினேன்" என்று மனம் வருந்திய ரமேஷ், தம்பியின் கன்னங்களில் முத்தமிட்டு, "தம்பி இனி உன்னை விட்டு எங்கும் போகமாட்டேன்" என்று கூறினான்.

"அண்ணா! இறைவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆற்றலை வழங்கியுள்ளான். எனக்கு கல்வியை கொடுத்துள்ளான். அதைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொண்டேன். என் அண்ணனுக்கும் இறைவன் ஏதாவது ஒரு ஆற்றலை வழங்கியிருப்பான். அதை நீங்கள் பயனுள்ள விதத்தில் பயன் படுத்தினால் நாம் இருவரும் இனி மகிழ்ச்சியாக வாழலாம்' என்று அவனுக்கு ஆறுதல் மொழி கூறினான். இதன்பின்னர்

இருவரும் உழைத்து வாழ்க்கையில் முன்னேறிப் பேரும், புகழும் பெற்று வாழ்ந்தனர்.

எம்.எச்.எஃப்.ரிஸ்னா,
ப/அல்-அஸ்ஹர் மு.வித்.,
அலுகொல்லை.

## பொன் மொழிகள்

✱ தனக்குத்தான் எல்லாம் தெரியும் என நினைப்பவன் முட்டாள். மற்றவரின் கருத்தையும் கேட்பவன் அறிவாளி.

✱ நல்ல நண்பனுடன் பழகும்போது நல்ல குணங்கள் அதிகரிக்கின்றன, தீய நண்பனுடன் பழகும்போது இருக்கின்ற நல்ல குணங்களும் அழிந்து விடுகின்றன.

✱ நீ தோல்வியடையும் போது சமுதாயத்தின் கேலிப் பேச்சுக்களைப் பொருட்படுத்தாதே. அதே சமுதாயம் நீ வெற்றியடையும்போது வாழ்த்தி விட்டுப் போகும்.

✱ தன்னைத்தானே வென்றவன் ஆயிரம் வீரர்களை வென்றவனை விட மேலானவன்.

✱ அமைதியாக இருங்கள் நீங்கள் எவரையும் வசப்படுத்திக் கொள்ளமுடியும்.

✱ நல்லவனாகப் பிறப்பது சந்தர்ப்பத்தினால், நல்லவனாக வாழ்வது முயற்சியினால்.

✱ நீ எவ்விடத்தில் தாழ்த்தப் படுகின்றாயோ அவ்விடத்தை விட்டு விலகிவிடு.

✱ ஏமாற்றுபவனை விட ஏமாற்றப்படுபவன் முட்டாள்.

✱ பிறர் மனம் நோகப்பெரு வாழ்வு வாழ்வதை விட எப்போதும் ஏழ்மையாக வாழ்வதே சிறப்பு.

தொகுப்பு:
சஹானா இஸ்மாயில்,
பு/பாத்திமா மு.கல்.,
புத்தளம்.

# சூழல் மாசடைதல்

தொழில்நுட்ப வளர்ச்சியினால் இன்றைய உலகம் எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்சினை சூழல் மாசடைதலாகும். தொழில்நுட்பவியல் வளர்ச்சியில் நிலம், நீர், வளி என்பன மாசடைந்து உயிரினங்கள் ஆரோக்கியமாக வாழ முடியாத சூழ்நிலை தற்போது உருவாகி வருகின்றது. பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை வளி மாசடைவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. வளியிலுள்ள அழுக்குகள் மழைநீருடன் கலப்பதால் நிலத்தையும் நீரையும் அது மாசடைய வைக்கின்றது.



மனித இனத்திற்கு நிலமே முதன்மையான இயற்கை வளமாகும், சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் நிலப்பற்றாக் குறைவினால் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால், மக்கள் நலமாக வாழக்கூடிய சூழல் மிக மோசமாக மாறி வருவதைக் காணமுடிகிறது. ஆகவே, விஞ்ஞானத்தின் துணைகொண்டு மேற்படி நிலைமைகள் மாற்றி அமைக்கப்படுமானால் அது வரவேற்கத்தக்க விடயமாகும்.

மோ.திவ்வியன்,
மட்/நொத்தாரிஸ் மூத்த தம்பி வித்.,
ஆரையம்பதி.

# புத்தகத்தால் சமாதி



ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் நூல்கள் மீது மிகவும் விருப்பம் கொண்டு இருந்தவர்களில் ஜாஹீஸ் தலையானவராவார். எந்தப் பொருள் பற்றிய நூலாயினும் அதனை அவர் கையில் எடுத்து விட்டால் முழுவதையும் படித்து முடிக்காமல் கீழே வைக்கமாட்டார்!

இவர் எழுதிய எண்ணற்ற நூல்களில் இவர் காட்டும் மேற்கோள்களைக் கவனித்தால், இவர் பல்லாயிரக்கணக்கான நூல்களைப் படித்துள்ளது விளங்கும்.

இவர், முதிய வயதில் கீழ்வாதம் ஏற்பட்டு, நடக்கமுடியாத சூழ்நிலையில் ஒருநாள் தாம் சேகரித்து வைத்த புத்தக அடுக்குகளுக்கு மத்தியில் அமர்ந்து, படித்துக் கொண்டிருந்தபோது, அந்தப் புத்தக அடுக்குகள் இவர் மீது சாய்ந்து விழ அதில் சிக்கி மீள முடியாமல் இறந்து போனார்.

தொகுப்பு: மர்ஸியா நாபிர், பேருவளை.

# நான் வைத்தியராயிருந்தால்...

வைத்தியராக நானிருந்தால்
வையம் போற்ற வாழ்ந்திடுவேன்
கைலஞ்சம் வாங்காமல்
கருணையோடு செயல்படுவேன்
சாதி, பேதம் பார்க்காமல்
சகலருக்கும் உதவிடுவேன்
நீ தி தவறிப் போகாமல்
நாளும் சேவை செய்திடுவேன்!
சீறிச் சினந்து நிற்காமல்
சிரிப்புடனே பழகிடுவேன்
மீறி எதையும் செய்யாமல்
மனமிரங்கி உதவிடுவேன்
எதிரியையும் நண்பனாக்கி
என்வசமே வைத்திடுவேன்
நாதியற்ற மக்களுக்கு
நல்லுதவி புரிந்திடுவேன்!

எம்.ஜே.எஃப்.றுக்ஷானா, கல்லேவ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.மில்ஹான்,
தரம் - 11,
அல்-பஹ்ரியா மத்திய கல்.,
பாணந்துறை.



வி.ரொஷாந்தனி,
தரம் - 8,
சௌதம் த.ம.வித்.,
தெமோதர.



தனுஜா நவோதனி,
தரம் - 7,
அஸ்க்வெளி த.க.வித்.,
பதுரலிய.




எம்.எஃப்.எம்.ஹாஸிக்,
தரம் - 6,
இசிபதன கல்லூரி,
கொழும்பு-05.



எம்.எஸ்.முஹம்மத்,
தரம் - 3,
அமானா சர்வதேச பாட.,
அட்டுலுகம.



ஹப்ஸா சௌபர்,
தரம் - 7,
மா/ஆமினா மகளிர்
தே.பாட., மாத்தளை.



ஆர்.ரமேஸ்,
தரம் - 9,
கதிரேசன் தமிழ் ம.வித்.,
தெரணியகல.



எம்.எஃப்.முர்சிதா,
தரம் - 9,
பாத்திமா முஸ்லிம்
ம.வித்., புத்தளம்.



2008 க.பொ.த (சா/தர) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் கருத்தரங்கொன்று STEPS நிறுவனத்தினால் அண்மையில் திஹாரி, அல்-அஷ்ஹர் மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது STEPS நிறுவனத்தின் தலைவர் ஏ.எம்.ஸஃப்ரி உரையாற்றுவதையும் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.



கல்முனையிலிருந்து வெளியாகும் 'ஒளிக்கீற்று' காலாண்டு கல்விச் சஞ்சிகையில் வெளியான போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வின்போது கல்முனை, ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எஸ்.எச்.எம்.எம்.ஏ.காதர் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். தகவல்: நிப்றாஸ் மன்சூர் (விஜய் இளம் செய்தியாளர்)



ஹற்றன் நெஷனல் வங்கி, கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்திய 'லொவ தினன சிங்கித்தோ' சித்திரப் போட்டியில் அக்கரைப்பற்று, அல்-ஹிதாயா வித்தியாலய மாணவி எஃப்.நவ்ஷீதா, அம்பாறை மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இவர் அப்துல் ஜப்பார் -சித்தி அஸீஸா தம்பதியரின் புதல்வியாவார்.

தகவல்:
நப்றாஸ் எம்.ஜப்பார்
(விஜய் இளம் செய்தியாளர்)



அங்.இல : 2619
பா.சப்னம்,
தரம் - 7,
றகுமானியா ம.வித்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2620
சி.தர்மினி,
உயர்தரம்,
நல்லூர் ம.வித்.,
பூநகரி.



அங்.இல : 2621
எஃப்.நிஸ்ரா,
தரம் - 9,
அல்-அமிர்முஸ்லி வித்.,
வீரகெடிய.



அங்.இல : 2622
எஸ்.தர்சன்,
தரம் - 3,
சிவானந்த த.வித்.,
கண்டி.



அங்.இல : 2623
என்.செய்னப்,
தரம் - 4,
அல்-மனார் ச.பாட.,
கொழும்பு.



அங்.இல : 2624
சி.ஷாதுலா,
தரம் - 9,
இந்துக் கல்.,
இரத்தினபுரி.



அங்.இல : 2625
எம்.ரிம்ஷாட், தரம் - 8,
சேர்.ராசிக் பரீட்
மு.ம.வித்,
பண்டாரவளை.



அங்.இல : 2626
ஞா.பிரகாஸ்,
தரம் - 9,
அ.த.க.பாட.,
கொடிகாமம்.



அங்.இல : 2627
எஃப்.பார்ஹானா,
உயர்தரம்,
மன்/எ.ம.ம.வித்.,
எருக்கலம்பிட்டி.



அங்.இல : 2628
கி.திஷாந்,
தரம் - 10^A,
பரமேஸ்வரா வித்.,
வவுனியா.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2629
எம்.வைதேகி,
தரம் - 11,
விவேகானந்தா பெ.கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2630
ஜே.ஜெஸ்மின்,
உயர்தரம்,
பாரதி ம.வித்.,
தலவாக்கலை.



அங்.இல : 2631
க.ராதா,
தரம் - 11,
பற்றிமா ம.ம.வித்.,
மன்னார்.



அங்.இல : 2632
சி.திருச்செல்வம்,
தரம் - 11,
ப/தொ.த.க.வித்.,
தொட்டுவாகலை.



அங்.இல : 2633
ஐ.எம்.இஜாஸ்,
உயர்தரம்,
ஸாஹிரா கல்.,
கல்முனை.



அங்.இல : 2634
எம்.அஸீம்,
உயர்தரம்,
பு/ப மு.ம.வித்.,
பள்ளிவாசல்துறை.



அங்.இல : 2635
ஏ.அஸார்,
தரம் - 8,
மு.ம.கல்.,
பொலன்னறுவை.



அங்.இல : 2636
எஃப்.ஸாஜிதா, தரம் - 6,
அழுத்கமவீதிய,
மு.ம.தே.கல்.,
தர்கா நகர்.



அங்.இல : 2637
எம்.ஹனான்,
தரம் - 7,
மூ.ம.கல்.,
மூதூர்.



அங்.இல : 2638
அஸ்மத் பானு, தரம் - 6,
செந்நெல் ஸாஹிரா
கல்.,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் ஆனந்தவுக்கும் மாமிக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

ආනන්ද: ආයුබෝවන් නැන්දේ.
ஆயுபோவன் நெந்தே.
ஆனந்த: வணக்கம் மாமி.

නැන්දා: ආයුබෝවන් ආනන්ද. ඇතුළට එන්න.
ஆயுபோவன் ஆனந்த. எதுளட என்ன.
மாமி: வணக்கம் ஆனந்த. உள்ளே வாங்க.



වාඩිවෙන්න.
வாடிவென்ன.
உட்காருங்கள்.

ආනන්ද: බොහෝම ස්තුතියි නැන්දේ.
பொஹோம ஸ்தூதிய் நெந்தே.
ஆனந்த: மிக்க நன்றி மாமி.

නැන්දා: පුතා කොහේද යන්නේ?
புதா கொஹேத யன்னே?
மாமி: மகன் எங்கே போகிறீர்கள்?

ආනන්ද: මම කඩයට යනවා නැන්දේ.
மம கடயட யனவா நெந்தே.
ஆனந்த: நான் கடைக்குப் போகின்றேன்.



නැන්දා: මොනවා ගන්නද යන්නේ?
மொனவா கண்ணத யன்னே?
மாமி: என்ன வாங்கப் போகிறீர்கள்?

ආනන්ද: හාල්, පිටි, සීනි, පරිප්පු.
ஹால், பிடி, சீனி, பரிப்பு.
ஆனந்த: அரிசி, மா, சீனி, பருப்பு.

නැන්දා: මටත් බඩු ටිකක් ගන්න ඕනේ. ගෙනත් දෙනවද?
மடத் படு டிகக் கண்ண ஓணே. கெனத் தெனவத?
மாமி: எனக்கும் கொஞ்சம் சாமான் வாங்க வேண்டும்.
வாங்கிக்கொண்டு வருகிறீர்களா?

ආනන්ද: ගෙනත් දෙන්නම් නැන්දේ.
கெனத் தென்னம் நெந்தே.
ஆனந்த: வாங்கி வருகின்றேன் மாமி.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: மகன் உள்ளே வாங்க.
පුතා ඇතුළට එන්න.

i. நான் கடைக்குப் போகிறேன்.
..........................................

ii. எனக்கும் கொஞ்சம் சாமான் வாங்க வேண்டும்.
..........................................

iii. என்ன வாங்கப் போகிறீர்கள்?
..........................................






'**Were**' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை (Past Tense Auxiliary Verb) தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை, 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைத்தல்.

(அ) You were in the office.
நீ அலுவலகத்தில் இருந்தாய். (உடன்பாடு)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' நிலை வாக்கியத்தில் காணப்படுகின்ற 'were' எனும் துணை வினைச்சொல்லை, அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறச் செய்கின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாக மாற்றமடைகின்றது. உதாரணத்தை இங்கே அவதானிப்போம்.

(ஆ) Were you in the office?
நீ அலுவலகத்தில் இருந்தாயா? (வினா)

★ இவ்வாறே ஏனைய வாக்கியங்களையும் அமைக்கலாம்.

(அ) You all were in the class yesterday.
நீங்கள் எல்லோரும் நேற்று வகுப்பில் இருந்தீர்கள். (உடன்பாடு)

(ஆ) Were you all in the class yesterday?
நீங்கள் எல்லோரும் நேற்று வகுப்பில் இருந்தீர்களா? (வினா)

---

(அ) You were at home yesterday.
நீ நேற்று வீட்டில் இருந்தாய். (உடன்பாடு)

(ஆ) Were you at home yesterday?
நீ நேற்று வீட்டில் இருந்தாயா? (வினா)

(அ) You were here yesterday.
நீ நேற்று இங்கே இருந்தாய். (உடன்பாடு)

(ஆ) Were you here yesterday?
நீ நேற்று இங்கே இருந்தாயா? (வினா)

---

(அ) They were in school yesterday.
அவர்கள் நேற்று பாடசாலையில் இருந்தார்கள். (உடன்பாடு)

(ஆ) Were they in school yesterday?
அவர்கள் நேற்று பாடசாலையில் இருந்தார்களா? (வினா)

(அ) They were in the church yesterday.
அவர்கள் நேற்று தேவாலயத்தில் இருந்தார்கள். (உடன்பாடு)

(ஆ) Were they in the church yesterday?
அவர்கள் நேற்று தேவாலயத்தில் இருந்தார்களா? (வினா)

---

(அ) The children were in school yesterday.
அந்தப் பிள்ளைகள் நேற்று பாடசாலையில் இருந்தன. (உடன்பாடு)

(ஆ) Were the children in school yesterday?
அந்தப் பிள்ளைகள் நேற்று பாடசாலையில் இருந்தனவா? (வினா)

(அ) The boys were in the garden yesterday.
அந்த ஆண் பிள்ளைகள் நேற்று தோட்டத்தில் இருந்தன. (உடன்பாடு)

(ஆ) Were the boys in the garden yesterday?
அந்த ஆண் பிள்ளைகள் நேற்று தோட்டத்தில் இருந்தனவா? (வினா)

(அ) The books were here yesterday.
அந்தப் புத்தகங்கள் நேற்று இங்கே இருந்தன. (உடன்பாடு)

(ஆ) Were the books here yesterday?
அந்தப் புத்தகங்கள் நேற்று இங்கே இருந்தனவா? (வினா)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


# ஆசியான் மாநாடு ஒத்திவைப்பு!



தாய்லாந்தில் எதிர்க்கட்சியினர் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் காரணமாக அந்நாட்டில் நடைபெறவிருந்த 'ஆசியான்' மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தாய்லாந்தின் பிரதமராக இருப்பவர் அபிஸித் வெஜ்ஜஜிவா ஆவார். ஆனால், இவர் ஜனநாயக விதிமுறைகளுக்கு மாறாகவே பதவியைக் கைப்பற்றியிருப்பதாக எதிர்க்கட்சி கூறிவருகின்றது. அதன் காரணமாக எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான தக்ஷின் சினவாத் ரோவின் ஆதரவாளர்கள் தற்போதைய அரசாங்கமும் பிரதமரும் பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த காலகட்டத்தில் தான் பிரதமர் வெஜ்ஜஜிவா 'ஆசியான்' மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

எனவே, பிரதமருக்கும் ஆளும் கட்சிக்கும் எதிரான தமது எதிர்ப்பின் இன்னுமோர் அடையாளமாக மேற்படி மாநாட்டை நடத்த விடாமல் தடுப்போம் என்ற கொள்கையில் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் மாநாடு நடைபெறவிருந்த ஹோட்டலின் எதிரேயே நடைபெற்றன. இதன்போது அடிதடிச் சம்பவங்களுடன், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

# பாதுகாப்பு விடயத்திலும் பொருளாதார நெருக்கடி



பொருளாதார சிக்கல் காரணமாக அமெரிக்காவின் பாதுகாப்பு விடயம் சம்பந்தமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

அந்நாட்டில் கடந்த வாரம் பாதுகாப்புத் தொடர்பான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டதையொட்டி நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்படி தீர்மானம் அறிவிக்கப்பட்டது. இதன்படி, தற்போது நடைமுறையிலுள்ள எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்புத் தொடர்பான விடயங்களுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படுவதன் காரணத்தால் மேற்படி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை செயலாளர் ரொபர்ட் கேட்ஸ் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ராணுவ நடவடிக்கைகளில் இது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கென 13 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் வடிவமைக்கப்பட இருந்த ஹெலிகொப்டர் தயாரிப்புப் பணியும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒபாமாவின் திடீர் ஈராக் விஜயம்



ஐரோப்பிய நாடுகளுக்கு ஒருவாரகால உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஈராக்கிற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

எந்தவொரு முன் அறிவித்தலுமின்றி மேற்கொண்ட இந்த விஜயத்தின்போது, ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க ராணுவத்தினரை நேரில் சந்தித்ததுடன், அந்நாட்டில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலைகளை நேரிடையாக அறிந்துகொள்ள ஜனாதிபதி ஒபாமா மிகுந்த அக்கறையை செலுத்தினார்.



இதற்கமைய ஈராக்கிலுள்ள அமெரிக்க ராணுவத் தளபதிகளையும் ஈராக்கிய அரசாங்கத் தலைவர்களையும் ஜனாதிபதி ஒபாமா சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின்போது, தான் வெற்றியீட்டினால் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரை நாட்டிற்கு மீள அழைப்பதாக ஒபாமா வாக்குறுதி அளித்திருந்தார். அதனை இந்த விஜயத்தின்போது நினைவூட்டிய ஒபாமா தான் வாக்குறுதி அளித்தது போலவே அமெரிக்கப் படையினரை 2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் தொடக்கம் ஈராக்கிலிருந்து மீள அழைக்கும் பணியை மேற்கொள்ள இருப்பதாகவும் ராணுவ வீரர்களின் முன்னிலையில் அவர் தெரிவித்தபோது அனைவரும் கரவொலி எழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்

**அற்லஸ் கேள்வி - 200**

**கேள்வி:** அமெரிக்க பாதுகாப்புத்துறைச் செயலாளரின் பெயர் என்ன?

**சரியான விடை**.......................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 200,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 198 இன் சரியான விடை: ஈரான்**

**பரிசு பெறுவோர்**

நஹ்ஸத்,
20 ஏ ஒழுங்கை, 3, ஸ்பில் வீதி, புத்தளம்.

எஃப்.மஹ்ரிஃபா,
95, ஸாஹிரா சைட், புளுகஹதென்ன,
அக்குறணை.

ஆர்.சகுந்தலா,
58/11, சென் ஜோசப் வீதி, கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களைப் பற்றியே அதிக நூல்கள் எழுதப்பட்டுள்ளன

உலகில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நூல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் நூல்களின் வகைகளும் அவற்றின் தொகைகளும் அதிகரித்தன. இன்று நவீன தொழில்நுட்பம் இமாலயத்தை தொடுமளவிற்கு முன்னேறியிருந்தாலும்கூட நூல்களின் வருகையும் அதன் வெளியீடுகளும் குறைந்ததாகத் தெரியவில்லை.

நூல்களைப் பொறுத்தவரையில் அது மொழி, இலக்கியம், அரசியல், மதம், விஞ்ஞானம் என குறித்த சில துறைகளைச் சார்ந்ததாக இல்லாமல், பல்வேறு துறைசார் நூல்கள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. எனினும், இவற்றிடையே உலகின் முக்கியமான - பிரபலமானவர்களைப் பற்றி வெளிவந்த நூல்களின் தொகையே அதிகமாகும். அந்த வகையில், 20ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி 5152 நூல்கள் வெளிவந்துள்ளன. இதுவே தனிப்பட்ட ஒருவரைப் பற்றி இதுவரை வெளிவந்த அதிகமான எண்ணிக்கையிலான நூல்கள் ஆகும்.


இயேசு கிறிஸ்து


ஷேக்ஸ்பியர்


ஆப்ரஹாம் லிங்கன்

இதற்கடுத்ததாக, ஆங்கில இலக்கியவாதியான ஷேக்ஸ்பியர் பற்றி 3172 நூல்கள் வெளிவந்துள்ளன. அடுத்து, ஐக்கிய அமெரிக்காவின் புகழ்பூத்த ஜனாதிபதியான ஆப்ரஹாம் லிங்கனைப் பற்றி 2319 நூல்கள் வெளிவந்துள்ளன. மிகவும் பின்தங்கிய குடும்பத்தில் பிறந்த ஆப்ரஹாம் லிங்கன் தனது கடும் முயற்சியினால் அமெரிக்க ஜனாதிபதியானார். அமெரிக்க உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவுகட்டியதோடு, அமெரிக்காவை ஆட்டிப்படைத்த அடிமை வியாபாரத்தையும் ஒழித்தார். ஈற்றில் இவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே, ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வொஷிங்டன் பற்றி 1755 நூல்கள் வெளிவந்துள்ளன. இவர் பிரித்தானியாவிற்கு எதிராக சுதந்திரப் போரை வழிநடத்தி, அமெரிக்காவை வெற்றி பெறச்செய்தார். இப்போரில் அமெரிக்கா வெற்றி பெற்று சுதந்திர நாடாகியது.

அடுத்து, பிரான்சிய சக்கரவர்த்தி மாவீரன் நெப்போலியன் பொனபாட் பற்றியே அதிக நூல்கள் வெளிவந்துள்ளன. இதுவரை நெப்போலியன் பற்றி வெளிவந்த நூல்களின் எண்ணிக்கை 1735 ஆகும். பிரெஞ்ச் புரட்சியால் நலிவடைந்த பிரான்ஸை தனது வீரதீரச் செயல்களால் வல்லரசாக மாற்றிய பெருமை நெப்போலியனையே சாரும். 1769 இல் பிறந்த நெப்போலியன் தனது குறுகிய காலப் போராட்டத்தில் வென்று, பல நாடுகளை அடிபணிய வைத்து உலகையே ஆச்சரியமடையச் செய்தார். எனினும், ஈற்றில் 1815 இல் பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு 1821 இல் சிறையில் மரணமானார்.

மேற்குறித்த ஐந்து நபர்களைப் பற்றியே மிக அதிகமான நூல்கள் உலக அரங்கில் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

**-இரஞ்சித் ஜெயகர்**


ஜோர்ஜ் வொஷிங்டன்


மாவீரன் நெப்போலியன்



கண்டுபிடிக்கப்பட்ட எச்சம்

# 505 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட 'ஹார்டியா விக்டோரியா'

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் அமைந்துள்ள 'ஸ்மித்சோனியன்' அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள விலங்கு எச்சங்கள் மற்றும் எலும்புக் கூடுகளில் இருந்து வியப்பான விலங்கினம் ஒன்றின் எச்சம் வெளிப்பட்டுள்ளது. 97 வருடங்களாக அந்த எச்சங்களுக்குள் மறைந்திருந்த இந்த விலங்கு, வளையங்களுடனான உடலமைப்பையும் நீண்ட முகத்தில் கூரான கொம்பு போன்ற அமைப்பையும் கொண்ட விசித்திரமான உயிரினமாகும் என இனங்காணப்பட்டுள்ளது.

1912 ஆம் ஆண்டு கனடாவின் 'பர்ஜஸ் ஷேல்' எனும் அகழ்வாராய்ச்சிப் பிரதேசத்தில் இந்த விலங்கினத்தின் உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றை நன்கு பரீட்சித்த அகழ்வாராய்ச்சியாளர்கள், இது 505 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு விலங்கினம் என்று கூறியுள்ளனர். மேலும் இந்த எலும்புக்கூட்டுத் தொகுதி, கடினமான ஓடுடைய நீர்வாழ் உயிரினமொன்றினதாகவும் அது 'ஆத்ரபோடா' (Arthropoda) வகையைச் சேர்ந்தது என்றும் தீர்மானிக்கப்பட்டது.


அத்துடன், 1990 களிலும் இந்த விலங்கினத்திற்கு ஒப்பான மேலும் பல எச்சங்களும் உடல் எலும்புத் தொகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த விலங்கினத்தின் எலும்புகளையும் எச்சங்களையும் ஆராய்ந்து பார்த்ததில் 'லொடியன்' எனப்படும் ஜெலிஃபிஷ் மற்றும் வேறு வகை ஆத்ரபோடா பிரிவைச் சார்ந்ததாக இந்த விலங்கினம் அடையாளப்படுத்தப்பட்டாலும் மறுபுறம் இது முழுமையாக வேறொரு உயிரின வகையைச் சேர்ந்தது என்றும் குறிப்பிடுகின்றனர்.

**'பிளவுபட்ட சரீரம் கொண்ட இந்த விலங்கினத்தின் மேற்பாகத்திலுள்ள முட்களின் தொகுதி தலையில் இருந்து கீழ்ப்பகுதி வரை பரந்துள்ளது. இது தற்போது உலகில் வாழும் எந்தவொரு விலங்கினத்தினதும் எச்சங்களுக்கு ஒப்பானதன்று'**

தற்போது இந்த அரிய வகை இனத்திற்கு 'ஹார்டியா விக்டோரியா' என்று பெயர் சூட்டியுள்ளனர். பிளவுபட்ட சரீரம் கொண்ட இந்த விலங்கினத்தின் மேற்பாகத்திலுள்ள முட்களின் தொகுதி தலையில் இருந்து கீழ்ப் பகுதி வரை பரந்துள்ளது. ''இது தற்போது உலகில் வாழும் எந்தவொரு விலங்கினத்தினதும் எச்சங்களுக்கு ஒப்பானதன்று. பல்வேறு விலங்கினங்களுக்கும் இவ்வாறான முட்தொகுதி அவற்றின் உடலின் மென்மையான பாகத்திற்கு அருகிலேயே அமைந்திருக்கும். எனினும், இந்த விலங்கினத்திற்கு அவ்வாறில்லை. உடலின் மிருதுவான பாகங்களுக்கு அப்பாலேயே இந்த முட்தொகுதிகள் அமைந்துள்ளன'' என்று இந்த விலங்கினம் குறித்து தொடர்ச்சியான ஆய்வுகளை நடத்திவரும் சுவீடன் பல்கலைக்கழகமொன்றின் ஆய்வாளரான எலிசன் டேலி குறிப்பிடுகின்றார்.


கணினி வடிவமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சுவரை ஏறிக் கட. இளவரசன் இவான்,காவலர்கள் நன்கு தூங்குகிறார்கள். லாயத்துக்குப் போய்க் குதிரையைப் பிடி. ஆனால், கடிவாளத்தை மட்டும் தொடக்கூடாது என்பதை நினைவில் கொள்'' என்றது சாம்பல் நிற ஓநாய்.

இளவரசன் இவான் காப்பரண் சுவரை ஏறிக் கடந்தான். எல்லாக் காவலர்களும் நன்கு தூங்கிக் கொண்டிருந் தார்கள். லாயத்துக்குப் போய் தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையைப் பற்றினான்.ஆனால், அவன் அதன் கடிவாளத்தைப் பிடிக்காமல் இருக்க முடியவில்லை. அது தங்கத்தால் செய்யப்பட்டு, அரிய கற்கள் அதில் பதிக்கப்பட்டி ருந்தன. இக்குதிரைக்குப் பொருத்தமான கடிவாளம் அது.

இளவரசன் இவான் கடிவாளத்தைத் தொட்ட அக்கணமே காப்பரணுக்குள் ளாக கூச்சலும் குழப்பமும் எழுந்தன. டிரம்பட்டுகள் முழங்கவும் மேளங்கள் அடிக்கத் தொடங்கவும் காவலர்கள் விழித்தெழுந்து, இளவரசன் இவானைப் பிடித்து அரசர் குஸ்மானிடம் இழுத்துச் சென்றார்கள்.

''யார் நீ? எங்கிருந்து வருகிறாய்?'' என்று அரசர் கேட்டார்.

''நான் இளவரசன் இவான்''

''ஓர் அரசருடைய மகன் குதிரைகளைத் திருடுகிறான். என்ன முட்டாள்தனமான காரியம் செய்கிறாய்! ஒரு சாதாரண குடியானவன் கூட இப்படிச் செய்யமாட்டான். ஆனால், இளவரசன் இவான், நான் சொல்வது போல நீ செய்தால் உன்னை நான் மன்னிப்பேன். அரசர் தால்மாத்துக்கு பேரழகி யெலேனா என்ற மகள் இருக்கின்றாள். அவளை என்னிடம் கொண்டு வா, தங்கப் பிடரிமயிர் கொண்ட எனது குதிரையும் அதனது கடிவாளத்தையும் உனக்கு நான் அன்பளிப்பாகத் தருகிறேன்''

இளவரசன் இவன் முன்னிலும் அதிகமாகக் கவலையும் துயரமும் அடைந்து சாம்பல்நிற ஓநாயிடம் திரும்பிச் சென்றான்.

''கடிவாளத்தைத் தொட வேண்டாம் என்று நான் உனக்குச் சொன்னேனே, இளவரசன் இவான். எதற்காக எனது எச்சரிக்கையை நீ பொருட்படுத்த வில்லை?'' என்றது ஓநாய்.

''வருந்துகிறேன் சாம்பல்நிற ஓநாயே! தயவுசெய்து என்னை மன்னித்துவிடு''

இளவரசன் இவானுடைய சாம்பல் நிற ஓநாய் புறப்பட்டது. விரைவில்

**இளவரசன் இவானுடைய சாம்பல் நிற ஓநாய் புறப்பட்டது. விரைவில் அரசர் தால்மாத்தின் நாட்டிற்குச் சென்றது. அங்கே காப்பரணின் தோட்டத்தில் பேரழகி யெலேனா தனது தாதிகளுடனும் வேலைக்காரிகளுடனும் உலாவிக் கொண்டிருந்தாள்**




அரசர் தால்மாத்தின் நாட்டிற்குச் சென்றது. அங்கே காப்பரணின் தோட்டத்தில் பேரழகி யெலேனா தனது தாதிகளுடனும் வேலைக்காரி களுடனும் உலாவிக் கொண்டிருந்தாள்.

''இந்த முறை எல்லாவற்றையும் நானே செய்வேன். நாம் வந்த வழியில் நீ திரும்பிப் போ. சீக்கிரமே உன்னோடு வந்து சேர்ந்து கொள்வேன்'' என்றது ஓநாய்.

இதனால், இளவரசன் இவான் தான் வந்த வழியில் திரும்பிச் சென்றான். சாம்பல் நிற ஓநாய் சுவரைத் தாவிக் கடந்து தோட்டத்திற்குள்ளாகக் குதித்தது. ஒரு புதருக்குப் பின்னே உட்கார்ந்து எட்டிப் பார்த்தது. அங்கே பேரழகி யெலேனா தனது தாதிகளுடனும் வேலைக்காரிகளு டனும் உலாவிக் கொண்டிருந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு அவள் பின்பக்கமாகப் போனபோது சாம்பல் நிற ஓநாய் அவளைப் பற்றிப் பிடித்து, தனது முதுகின் மீது குறுக்காகப் போட்டபடி, சுவரைத் தாண்டி நாற்கால் பாய்ச்சலில் ஓட்டம் பிடித்தது.

தான் வந்த பாதையில் இளவரசன் இவான் திரும்பி நடந்து போய்க் கொண்டிருந்தான். திடீரென்று அவனது உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. ஏனெனில், தனது முதுகில் பேரழகி யெலேனாவை சுமந்தபடி சாம்பல் நிற ஓநாய் அவன் முன் வந்து நின்றது.

''நீயும்கூட என் முதுகில் ஏறிக்கொள். சிக்கிரமாக அல்லது அவர்கள் நம்மைப் பிடித்துவிடக்கூடும்'' என்றது.

தன் முதுகின் மீது இளவரசன் இவானையும் பேரழகி யெலேனாவையும் சுமந்தபடி சாம்பல் நிற ஓநாய் பாதையில் துரிதமாகச் சென்றது. நீலநிற ஏரிகள் விரைவாகக் கடந்து சென்றன. நீண்ட பயணத்தின் பின்னர் அரசர் குஸ்மானுடைய நாட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். (தொடரும்....)

# காகிதத்துக்குள் காற்றும் நெருப்பும்

ஒரு காலத்தில் ஒரு செல்வந்தர் தனது இரு மகன்கள், மருமகள்களுடன் வசித்து வந்தார். மருமகள்கள் இருவரும் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எப்போதும் தங்கள் பிறந்த வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று துடித்துக் கொண் டிருப்பார்கள், ஒரு சிறிய காரணம் கிடைத்தால்கூட உடனே கிளம்பிவிடுவார்கள். அப்படி மனைவிகள் கிளம்பிச் சென்றுவிடும்போது அவர்களின் கணவர்கள் சரியாக சாப்பிடக்கூட வழியின்றித் தவிப்பார்கள். இது குறித்து முதியவர் வருந்தினார். எனவே, தனது மருமகள்கள் அடிக்கடி அவர்களின் பிறந்த வீட்டுக்குச் செல்வதைத் தடுக்க ஒரு தந்திரம் செய்தார்.

இவ்வாறே, ஒரு தடவை மருமகள்கள் இருவரும் புறப்பட்டபோது அவர்களை அழைத்த முதியவர், ''நீங்கள் தாராளமாக உங்களின் பிறந்த வீட்டுக்குச் சென்று வாருங்கள். ஆனால், நீங்கள் திரும்பி வரும்போது எனக்கு ஒன்றைக் கொண்டுவர வேண்டும். மூத்த மருமகளே, நீ நெருப்பைக் காகிதத்தில் எடுத்து வர வேண்டும். இளைய மருமகளே, நீ காகிதத்தில் காற்றைக் கொண்டு வர வேண்டும். நீங்கள் அப்படிக் கொண்டு வராவிட்டால் எனக்கு ரொம்பக் கோபம் வரும் உங்களை நான் வீட்டுக்குள்ளேயே அனுமதிக்க மாட்டேன்'' என்றார்.

மருமகள்கள் இருவருக்கும் அந்த நிபந்தனை வேடிக்கையாக இருந்தது. ஆனால், ஊருக்குப் போகும் சந்தோஷத்தில் அதற்கு ஒப்புக்கொண்டு விட்டனர். தாங்கள் பிறந்த கிராமத்துக்குச் சென்ற அவர்கள் அங்கு ஒரு மாத காலத்தை மகிழ்ச்சியாகக் கழித்தனர். பின்னர், புகுந்த வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் மாமனார் கேட்ட பரிசுகளைப் பற்றி யோசித்தனர்.

''ஐயோ, மாமனார் கேட்ட பரிசை நாம் தயார் செய்யவில்லையே அவர் மிகவும் கோபப்படுவாரே? நெருப்பையும் காற்றையும் எப்படிக் காகிதத்தில் எடுத்துச் செல்ல முடியும்?'' என்று புலம்பினர். சாலையோரமாக அமர்ந்து அழவும் தொடங்கி விட்டனர். அப்போது, அந்த வழியாக எருமை மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்த ஒரு பெண், ''ஏன் அழுகிறீர்கள்?'' என்று அவர்களைப் பார்த்துக் கேட்டாள். அதற்கு அவர்கள் விஷயத்தைக் கூறினர்.

உடனே அந்தப் பெண் சிரித்துவிட்டு, ''இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? உங்களுக்கு நான் அந்தப் பரிசுகளை தயாரித்துத் தருகிறேன்'' என்று அதனைத் தயார் செய்து கொடுத்தாள்.



மருமகள்கள் இருவரும் மகிழ்ச்சியோடு புகுந்த வீட்டை அடைந்தனர். அவர்களை வரவேற்ற மாமனார், ''நான் கேட்ட பரிசுகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

உடனே மூத்த மருமகள் ஒரு சிறிய காகிதப் பெட்டிக்குள் வைத்த விளக்கை ஏற்றினாள். இளைய மருமகள், காகித அட்டை விசிறி ஒன்றை எடுத்து விசிற, அதிலிருந்து காற்று வந்தது. அவற்றைப் பார்த்த முதியவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார், ''அருமை!'' என்றார்.

''இப்போது, நீங்கள் இருவரும் அடுத்த முறை உங்கள் பிறந்தவீட்டுக்குச் செல்லும்போது என்ன பரிசை எடுத்துவர வேண்டும் என்று கூறுகிறேன்'' என்று ஆரம்பித்தார்.

உடனே மருமகள்கள் இருவரும் 'பட்'டென்று, ''இல்லை... இன்னும் கொஞ்சக் காலத்துக்கு நாங்கள் எங்கள் பெற்றோர் வீட்டுக்குச் செல்வதாயில்லை'' என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை அணியை காத்த வீரனுக்கு பணப் பரிசு

பாகிஸ்தானின் லாகூர் நகரில் இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் இலங்கை அணி வீரர்களை காப்பாற்றிய பஸ் ஓட்டுனர் கலீல் சில தினங்களுக்கு முன்னர் இலங்கை வந்தமை நாம் அறிந்ததே.

இலங்கை அணியை காத்த கலீலுக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்தும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி நிகழ்வின்போது ஏராளமான பரிசுகள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. கிட்டத் தட்ட 25 லட்சம் ரூபா அளவிலான பரிசுத் தொகை அவருக்கு வழங்கப்பட்டது.


இலங்கை கிரிக்கெட் சபையில் நடை பெற்ற இந்த நிகழ்வின்போது கிரிக்கெட் சபையினால் கலீலுக்கு ரூபா 12 லட்சமும் விளையாட்டுத்துறை அமைச்சினால் ரூபா 5 லட்சமும், இலங்கை டெலிகொம் நிறுவனத் தினால் ரூபா 5 லட்சமும் தாஜ் தொலைக் காட்சி நிறுவனத்தினால் ரூபா 3 லட்சமும் பணப்பரிசாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கலீலின் மனைவியும் கூடவே வருகை தந்திருந்தார்.

இங்கு உரையாற்றியிருந்த கலீல், "இலங்கை கிரிக்கெட் அணி மீண்டும் பாகிஸ்தானுக்கு வந்து போட்டிகளில் கலந்து கொள்ளும் காலம் பிறக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத்துறை அமைச்சர், காமினி லொக்குகே மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஏ.ஜிலானி ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஐ.பி.எல். போட்டிகளுக்கு கடுமையான பாதுகாப்பு





தென் ஆபிரிக்காவில் நடைபெறுகின்ற 20/20 'இந்தியா பிரீமியர் லீக்' கிரிக்கெட் போட் டிகளில் கலந்து. கொள்கின்ற அணிகளின் வீரர் களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பா டுகள் மேற்கொள் ளப்பட்டிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அத்தோடு, ஜொஹனஸ்பேர்க் மற்றும் கேப்டவுன் பகுதிகளில் நடைபெறவுள்ள போட்டிகளில் இரட்டிப்பு பாதுகாப்பினை வழங்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது. தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபையும் இந்த வீரர்களுக்கு விசேட பாதுகாப்பினை வழங்கு வதில் கூடுதல் கவனத்தை செலுத்துவதாகவும் அறிவித்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தானின் லாகூர் நகரில் இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலின் காரணமாகவே இந்தளவிற்கு மிகப்பெரியபாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை தோன்றியிருப்பதா கவும் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

# ஆசிய கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளுக்கு இலங்கை தகுதி

2010 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியை இலங்கை கால்பந்தாட்ட அணி பெற்றுள்ளது.



இதற்கான தகுதிகாண் போட்டிகள் கொழும்பில் நடைபெற்றன. சீனாதைபே, பாகிஸ்தான், இலங்கை, புருனே ஆகிய அணிகள் தகுதிகாண் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தன. இதன்படி, முதலாவது போட்டியில் புருனே அணியை 5-1 என்ற கணக்கில் வெற்றியீட்டிருந்த இலங்கை, இரண்டாவது போட்டியில் சீனாதைபே அணியை 2-1 என்ற கணக்கிலும் வெற்றி யீட்டிருந்தது.மூன்றாவது போட்டி பாகிஸ்தானுடன் அமைந்திருந்த நிலையில் அப்போட்டியில் வெற்றி பெற்றாலோ, போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தாலோ இலங்கை அணி ஆசிய போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை பெறக்கூடியதாக இருந்தது.

அதன்படி, பாகிஸ்தான்-இலங்கை அணி களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல் களைப் பெற்று 2-2 என்ற கணக்கில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தமை யால், ஆசிய கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை இலங்கை அணி பெற்றது. பாகிஸ்தானுடனான போட்டியில் இலங்கை சார்பாக ரோஹான் மற்றும் சண்முகராஜா சஞ்சீவ் ஆகிய இரண்டு பேரே கோல்களைப் பெற்றுக் கொடுத்தவர்களாவர்.

# ஐ.சி.சி தரப்பட்டியல்

ஐ.சி.சி. யின் சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான தரப்பட்டியலில் இந்திய அணி இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. தென்னாபிரிக்கா- அவுஸ்திரேலியா அணிகளுக் கிடையே நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் அவுஸ்திரேலிய அணி தோல்வி யடைந்தமையினாலேயே இந்திய அணி இரண்டாம் நிலைக்கு முன்னேறியுள்ளது.

இதன்படி, முதல் எட்டு இடங்களை வகிக்கின்ற அணிகளின் விபரம் வருமாறு;

| தரவரிசை | நாடு | புள்ளி |
|---|---|---|
| 1 | தெ.ஆபிரிக்கா | 127 |
| 2 | இந்தியா | 122 |
| 3 | அவுஸ்திரேலியா | 121 |
| 4 | நியூஸிலாந்து | 112 |
| 5 | பாகிஸ்தான் | 111 |
| 6 | இங்கிலாந்து | 108 |
| 7 | இலங்கை | 105 |
| 8 | மே.இ.தீவுகள் | 92 |

**தென் ஆபிரிக்கா- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 ஆவது ஒருநாள் போட்டியில் ஆஸி வெற்றி பெறுமாயின் மீண்டும் 2 ஆம் நிலைக்கு அது முன்னேறக்கூடிய வாய்ப்பு இருப்பதாக சுட்டிக்காட்டப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.**



# வீராங்கனைக்கு விருது

அவுஸ்திரேலியாவில் அண்மையில் நடைபெற்ற மகளிருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் செம்பியன் கிண்ணத்தை வெற்றியீட்டிய இங்கிலாந்து அணியின் தலைவியான 'கிளேயர் டெயிலர்' 2009 ஆம் ஆண்டின் சிறப்பு கிரிக்கெட் வீராங்கனை என்ற விருதைப் பெற்றுள்ளார்.

உலகப் புகழ்பெற்ற சஞ்சிகையான 'விஸ்டன்' சஞ்சிகையே மேற்படி விருதை இவருக்கு வழங்கியுள்ளது. இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியிலுள்ள சிரேஷ்ட வீராங்கனையும் வயதில் மூத்த வீராங்கனையுமான கிளேயர், இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன்னர் ஏராளமான போட்டிகளில் இங்கிலாந்து அணியின் சார்பாக கலந்து கொண்டிருந்தார். மேலும், நடைபெற்ற உலகக் கிண்ண போட்டிகளில் 7 போட்டிகளில் போட்டியிட்ட இவர் மொத்தமாக 324 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இப்போட்டிகளில் துடுப்பாட்டத்தில் பெற்ற அதிகூடிய மொத்த எண்ணிக்கையாகவும் அது அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புச்சத்துக் குறைவினால் ஏற்படும் 'குருதிச்சோகை'



பாடசாலை செல்லும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் குருதிச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அண்மைய ஆய்வொன்றிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டின் முதல் பாகத்தில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமொன்று மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின்படி, 5 முதல் 14 வயது வரையிலான பிள்ளைகளில் 13% தொடக்கம் 20% ஆனவர்கள் குருதிச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## குருதிச்சோகை என்றால்?

குருதிக்கு 'ஹீமோக்ளோபின்' என்ற அணுக்களினால் சிவப்பு நிறம் கிடைக்கின்றது. உடல் முழுவதும் ஒட்சிசனை எடுத்துச் செல்ல ஹீமோக்ளோபின் அவசியமாகும். உடலில் இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்பட்டவுடன், குருதியில் உள்ள ஹீமோக்ளோபின் அணுக்கள் குறைவடைகின்றன. இதுவே 'குருதிச் சோகை' எனக் குறிப்பிடப்படுகின்றது.



எனவேதான் நாம் உட்கொள்ளும் உணவில் இரும்புச்சத்தினையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகின்றது. உடல் வளர்ச்சிக்கு இரும்புச்சத்து மிக அவசியமாகும். பிறப்பிலிருந்து இளம் பருவம் வரைக்கும் 4 முதல் 4.5 கிராம் அளவு இரும்புச்சத்து உடலில் சேர்கின்றது.

## குருதிச்சோகையினால் ஏற்படும் பாதிப்புகள்



* கற்றல் நடவடிக்கைகளில் மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை.
* குறுகிய கால நினைவாற்றலுக்குப் பாதிப்பு.
* விரைவில் களைப்பு ஏற்படல்.
* வளர்ச்சி குன்றுதல்.
* விரைவாக நோய்களுக்கு ஆளாதல்.
* பாடசாலை செயற்பாடுகளில் பாதிப்பு.
* சிந்தித்து செயற்படவேண்டிய நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படல்.

## குருதிச்சோகை ஏற்படுவதற்கான காரணங்கள்

* அன்றாடம் உட்கொள்ளும் உணவுகளில் உடலுக்குத் தேவையான இரும்புச்சத்துக் கிடைக்காமை.
* குருதி வெளியேற்றம்.

## இரும்புச்சத்தின் தன்மைகள்



உணவில் அடங்கியுள்ள இரும்புச் சத்தை அவற்றின் தன்மைக்கேற்ப இரண்டு வகைப்படுத்தலாம்.

**1. ஹீம் இரும்புச்சத்துள்ள உணவுகள் (Heam Iron)**

இந்த வகை இரும்புச்சத்து இறைச்சி,மீன்கள் அடங்கிய உணவுகளில் அடங்கியுள்ளன. இந்த உணவுகளினால் ஒரு வேளைக்கு 15-20% அளவு இரும்புச்சத்து உடலினால் உறிஞ்சப்படுகின்றது.

**2. ஹீம் இரும்புச்சத்து அற்ற உணவுகள் (Non Heam Iron)**

தானிய வகைகள், பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள், முட்டை மற்றும் பால் வகைகளில் இந்த வகை இரும்புச்சத்துக்கள் உள்ளன. இவை அகத்துறிஞ்சப்படுவது சற்றுக் கடினமாகும். எனினும், வேறு சில சத்துக்களடங்கிய உணவுகளை எடுப்பதனூடாக அதனை இலகுவாக்கிக் கொள்ளலாம்.

இலங்கை மக்களின் உணவுகள் அதிகமாக ஹீம் இரும்புச்சத்துள்ள உணவுகளாகவே உள்ளன.

இவ்வாறான உணவு வகைகளிலிருந்து உடலுக்குள் 5% ஆன இரும்புச்சத்துக்களே உறிஞ்சப்படுகின்றன. அதனால், உடலுக்குத் தேவையான இரும்புச்சத்தினை பெற்றுக்கொள்ள இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுகளை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## இரும்புச்சத்தினை அதிகம் உறிஞ்சிக்கொள்ள....

* விற்றமின் C அடங்கியுள்ள புதிய காய்கறிகள் மற்றும் பழ வகைகளை உட்கொள்ளல்.
* முளைவிட்ட கடலை, பயறு போன்றவற்றை உட்கொள்ளல்.



* உணவுவேளையின் போது அல்லது உணவு உட்கொண்டவுடன் கோப்பி, தேநீர் போன்ற பானங்களை அருந்தலாகாது. இரும்புச்சத்து உடலுக்குள் உறிஞ்சப்படுவதை இவை தடை செய்கின்றன.

## இரும்புச்சத்து அதிகம் அடங்கியுள்ள உணவு வகைகள்

* **கடும் பச்சை நிறக் காய்கறிகள்**

**உ+ம்** - பொன்னாங்கண்ணி, பசளை, கங்குன், கெரட், பீற் கீரை.

* **தானியம்**

**உ+ம்** - பருப்பு வகைகள், கௌபி, பயறு, உளுந்து, முளைவிட்ட பயறு, சோயா மற்றும் சோயா உற்பத்திகள்.

* **இறைச்சி**

**உ+ம்** - மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஈரல்கள் மற்றும் இதர பாகங்கள்.

## விற்றமின் C அடங்கிய உணவுகள்

* **பழங்கள்**

**உ+ம்** - நெல்லி, கொய்யா, மரமுந்திரிகைப் பழம், எலுமிச்சை, தோடம்பழம்.

* **பச்சை நிற இலைகளுடைய காய்கறிகள்**

**உ+ம்** - பீற், முருங்கை, ராபு, வல்லாரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 202 - பரிசுபெறும் அதிர்ஷ்ட சாலிகள்...

**போட்டி: 01**
ரா.நிரோஜன், தரம் - 3[B],
தோர்ஹுட் த.ம.வித்., தோர்ஹுட்...


**போட்டி: 02**
எஃப்.நதா, தரம் - 4[A],
அல்-அஸ்ஹர் ம.கல்., திஹாரிய.

**போட்டி: 03**
சி.சிறோத்தனா, தரம் - 3,
மட்/கன்னகி வித்., கோட்டைக் கல்லாறு.

**போட்டி: 04**
எம்.ஏ.நஃபீல், தரம் - 9T/A,
ஸாஹிரா கல்., கொழும்பு-10.

**போட்டி: 05** (குறு.போ-213)
எம்.எஃப்.இல்மா, தரம் - 8[C],
ஸாஹிரா கல்., தர்கா நகர்.

## வழி காட்டுங்கள் 2




## இணைக்க 4

| A | B |
|---|---|
| 1. உலகின் சர்க்கரைக் கிண்ணம் | 1. இலங்கை |
| 2. ஏழு மலைகளின் நகரம் | 2. ரோம் |
| 3. ஐரோப்பாவின் தொட்டில் | 3. கியூபா |
| 4. ஈடனின் தோட்டம் | 4. சுவிற்சர்லாந்து |

## சரியான வாக்கிய ஒழுங்கமைப்பின் கீழ் கோடிடுக 3

(A) (அ) அவன் வீட்டிலிருந்து புறப்பட்டான்.
(ஆ) கடன் கொடுத்தான்.
(இ) எட்டு மணிக்கு அலுவலகத்தைச் சென்றடைந்தான்.
(ஈ) வங்கியில் பணம் எடுத்தான்.
(உ) இரண்டு மணிக்கு வங்கிக்குச் சென்றான்.

1. உ, ஈ, அ, ஆ, இ
2. அ, இ, உ, ஈ, ஆ
3. இ, அ, உ, ஆ, ஈ

(B) (அ) கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்டான்.
(ஆ) முத்திரை ஒட்டினான்.
(இ) கடதாசி ஒன்றை எடுத்தான்.
(ஈ) கடிதத்தை தபால் உறையில் போட்டு ஒட்டினான்.
(உ) நீண்ட கடிதம் எழுதினான்.

1. இ, உ, ஈ, ஆ, அ
2. ஈ, உ, அ, ஆ, இ
3. உ, ஈ, ஆ, அ, இ

## அறிவுக்கு விருந்து 202 விடைகள்

**போட்டி: 3**
Cycle, Scooter, Bus, Car, Van, Jeep, Tractor, Bike, Cab, Truck

**போட்டி: 4**
1. பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 7.00 மணிக்கு வானொலியில் சிறுவர் பாடல்கள் ஒலிபரப்பாகும். (அல்லது) வெள்ளி தோறும் காலை 7.00 மணிக்கு வானொலியில் சிறுவர் பாடல்கள் ஒலிபரப்பாகும்.
2. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன.
3. அது நேற்று வந்தது.
4. வயதுபோன ஒரு கிழவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள்.
5. கடந்த வருடத்தை விட இந்த வருடம் உலக சனத்தொகை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1








**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.04.29 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 205**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை தபாலட்டையில் மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.216 5



### மேலிருந்து கீழ்

01. பருபதங்களின் இறுதியில் நிற்பது.
02. இந்தியாவில் (பெரும்பாலும்) கேரள மாநிலத்தில் உள்ளவர்களால் பேசப்படுகின்ற மொழி.
03. கிரிக்கெட்டில் 100 ஓட்டங்களைப் பெறுவதை இவ்வாறு குறிப்பிடுவர்.
06. ஆடு, மாடு மேய்ப்பவன்.
08. பல்வேறு கைப்பணிப் பொருட்களுக்குப் பயன்படும் மரமொன்று.
09. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன்.

### இடமிருந்து வலம்

01. நல்ல அம்சங்களையும் குறைகளையும் ஆராய்ந்து சொல்லப்படுவது.
04. 'காய்களின் தொகுதி' இவ்வாறு அழைக்கப்படும்.
05. 'அர்ப்பணிப்பு' என்றும் அர்த்தப்படும்.
07. பிரம்பு/ஓலையால் பின்னி தயாரிக்கப்படுவது.
08. மும்பாய் நகரின் பழைய பெயர்.
10. நீரில் வாழும் உயிரினம்.

### குறுக்கெழுத்துப்போட்டி 213 விடைகள்

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 01. கிரேக்கம் | 05. வறுமை |
| 02. புதன் | 06. ஒடியல் |
| 03. வளை | |

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 01. கிராம்பு | 07. கண்டி |
| 04. தவளை | 08. மைல் |
| 06. ஒன்று | 09. வில்வித்தை |

**குறுக்கெழுத்துப் போட்டி -216**
**"விஜய்"**
**த.பெ.எண். 2037**
**கொழும்பு**

### பாராட்டுப் பெறுவோர்

சு.விஜயகுமார், தரம் - 9[A],
இ/கலைமகள் த.வித்.,
இரத்தினபுரி.

எம்.எம்.மபாகிர், தரம் - 11,
மட்/அந்-நூர் தே.பாட.,
வாழைச்சேனை.

ப.ஜினித்தா, தரம் - 8,
ப/கலப்பிட்டகந்த த.வித்.,
பள்ளக்கெட்டுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோல்வியில் முடிந்த சுற்றிவளைப்பு

கொழும்பு நகரில் நடந்த யுத்தங்கள் அனைத்திலும் ஒல்லாந்தருக்குத் தோல்விகளே ஏற்பட்டன. எனினும், அவர்கள் தமது முயற்சியைக் கைவிடவில்லை. இதற்கிடையில் யாழ்ப்பாண தேசாதிபதி கொழும்புக்கு உணவுப் பொருட்களை அனுப்பினார். அது நகரத்திற்கு கிடைக்கவில்லை. முகத்துவாரத்தில் அதனை ஒல்லாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். அதனால், நகரமக்கள் பசியால் வாடினர்.

இரண்டாம் இராஜசிங்க மன்னன் நகரச் சுற்றிவளைப்பு வெற்றிபெறாதது குறித்து மிகவும் கவலை அடைந்தார். அது குறித்து ஒல்லாந்த தலைமைத் தளபதி மீது குற்றம் சுமத்தினார். அந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்ட காலம் உகந்ததா? கூடாதா? என பேசித்தீர்மானிக்காததே அவரது குற்றம் சுமத்தலுக்குக் காரணமாகும். இதன் பிறகு யுத்தம் மேற்கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

அக்கோரிக்கையை ஒல்லாந்தர்கள் பொருட்படுத்தவில்லை. இந்த யுத்தத்தில் அரசனை நீக்கத் தீர்மானித்தனர். எனினும், வெளிப்படையாக அரசனுடன் பகைமை பாராட்ட அவர்கள் விரும்பவில்லை.

கொழும்பு நகரைக் கைப்பற்றிய பின் அதனை உடைத்துத் தகர்க்கவோ அல்லது அரசனிடம் கையளிக்கவோ ஒல்லாந்தர் எண்ணவில்லை. எப்படி இருந்தபொழுதிலும் அரசனின் உதவி அவர்களுக்கு அவசியமாக இருந்தது. நகரத்தைக் கைப்பற்றும்வரை அரசனுடன் நல்லுறவைப் பேண இந்த அந்நியர்கள் விரும்பினர். எந்த வகையிலும் நகரைக் கைப்பற்ற வேண்டும் என்ற பெரும் எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்தது. அதனைப் போர்த்துக்கேயரும் அறிந்திருந்தனர். எந்நேரமும் அவர்கள் ஒல்லாந்தரை தாக்கியபடியே இருந்தனர். நல்ல பாடம் கற்பிக்க எண்ணினர். அதனால், ஒல்லாந்தர் கொழும்பு நகரைச் சுற்றி வளைப்பதை தொடர்ந்து மேற்கொள்வது பெரும் சிரமமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து ரக கைத்தொலைபேசிகளுக்கும் பொதுவான ஒரேவகை 'சார்ஜர்'


கைத்தொலைபேசியிலுள்ள 'பெட்டரி'யை சார்ஜ் (Charge) செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற 'சார்ஜர்கள்' ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசப்படுவதை நாம் அறிவோம். கைத்தொலைபேசியின் ரகத்திற்கு ஏற்ப அதன் சார்ஜர்களும் மாறுபடுவதுண்டு. ஆனால், இந்த மாறுபாடு இன்னும் சில மாதங்களில் மாற்றம் பெறவுள்ளது.

அதாவது, எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து அனைத்து ரக கைத்தொலைபேசிகளுக்கும் பொதுவான ஒரே விதமான 'சார்ஜர்கள்' அறிமுகமாகவுள்ளது என்ற புதியதோர் செய்தி வெளியாகியுள்ளது.

உலகிலுள்ள பிரபல கைத்தொலைபேசி உற்பத்தி நிறுவனங்கள் ஒன்றிணைந்தே இந்த தீர்மானத்திற்கு வந்துள்ளன. நொக்கியா, சோனி எரிக்ஸன், சென்சுன், மோட்டரோலா, எல்.ஜீ ஆகிய நிறுவனங்களே இந்த ஒன்றிணைந்த தீர்மானத்திற்கு வந்துள்ளவையாகும்.

உலகளாவிய ரீதியில் நன்மை பயக்கத்தக்க ஒரு விடயத்தைக் கருத்தில் கொண்டே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது, கைத்தொலைபேசிகளைப் பாவிப்பவர்கள் தமது 'சார்ஜர்கள்' உடைந்து விட்டாலோ, செயலிழந்து விட்டாலோ வேறொரு சார்ஜரை விலை கொடுத்து வாங்குவதுண்டு, அநேகமாக அவ்வாறு வாங்கப்படுபவை 'டூப்ளிகேட்' (நகல்) சார்ஜர்களாகவே அமைவதுண்டு. அவ்வாறு உலகம் பூராவும் விற்கப்படுகின்ற 'டூப்ளிகேட்'






## ஜூன் மாதத்திலிருந்து பாவனைக்கு வருகின்றது

சார்ஜர்களின் மொத்த நிறை 82,000 தொன்களாகும். இந்த சார்ஜர்களை உற்பத்தி செய்யும்பொழுது சுற்றுச் சுழலுக்கு மாசு ஏற்படும் வகையில் பெருமளவு காபன் வாயு வெளியேற்றப்படுகின்றது. இதனால், கணிசமான அளவில் புவி வெப்பமடைதலும் ஏற்படுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டே அனைத்துத் தொலைபேசிகளுக்கும் பொதுவான 'சார்ஜரை' உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தின் மூலம் 13.6 தொன் வாயு வெளியேற்றல் தவிர்க்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய, வேறுவகை புதிய கைத்தொலைபேசியை வாங்கும்போது பழைய சார்ஜரை எறியும் தேவை நீக்கப்படுகின்றது. மேலும், சூழலுக்கு ஒவ்வாத 'டூப்ளிகேட்' சார்ஜரை வாங்கும் தேவையும் நீங்கிவிடுகின்றது. எனவே, 'டூப்ளிகேட்' (நகல்) சார்ஜர்கள் தயாரிக்கப்படுவது தவிர்க்கப்படுவதன் மூலம் சூழல் மாசடைதல் தடுக்கப்படுவதனால் உலகளாவிய ரீதியில் நீண்ட பயனை அது தோற்றுவிக்கின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் பதினாறாம் திகதி ஸ்பெய்ன் நாட்டில் நடைபெற்ற உலக கைத்தொலைபேசி மாநாட்டின்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து இந்த பொதுவான சார்ஜர் சந்தைக்கு அறிமுகமாகவுள்ளது. ஆயினும், உலகளாவிய ரீதியில் 2012 ஆம் ஆண்டளவிலேயே இது முழுமைப்படுத்தப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் கருதப்படுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 22, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org